# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்


மலர்:5 | இதழ்: 7 | ஏப்ரல் : 2021 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/–
Volume:5 | Issue: 7 | April : 2021 | Rs.10/- | Annual Subs: Rs.100/-




# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

**Shri G.S. Venkataraman**
Author

**Shri N. Subramaniam**
Managing Trustee

**Shri S. Suga, Smt. B. Indira Balaji, Shri. R.V. Sahtyanarayana, Shri. J. Sathish, Sow. G.V. Mahashree Neela**
Trustees



மஹாமேரு மண்டலி வேதபாரதி இணைந்து மாடம்பாக்கம் ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் ஆலயத்தில் 27.02.2021 அன்றும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயண கூட்டுப்பிரார்தனை சிறப்பாக நடைபெற்றது. திரளான மாதர்கள் கலந்து கொண்டு இறையருள் பெற்றார்கள். எல்லா வளமும் நலமும் பெற்று வாழ பிரார்த்தனை செய்தோம்.

## சித்திரை பௌர்ணமி

### கூட்டுப்பிரார்த்தனை

**நாள் : 26.04.2021 திங்கட்கிழமை, மாலை 5.00 மணி**

**இடம் : ஸ்ரீ தண்டீஸ்வரர் திருக்கோயில், வேளச்சேரி**

**தொடர்புக்கு :**

**94440 60346 / 94434 95950**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 19

**ஸம் க$^3$ச்ச$^2$த்$^4$வம் ஸம் வத$^3$த்$^4$வம் ஸம் வோ மநாம்ஸி ஜாநதா$^1$ம் |**
**தே$^3$வா பா$^4$க$^3$ம் யதா பூ$^1$ர்வே ஸம்ஜாநாநா உபாஸதே ||**

**-ரிக் வேதம், ஸம்வநந ஸூக்தம்.**

**பொருள் :**

*அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோமாக!*

*ஒன்றாகப் பேசுவோமாக! நம் மனங்களில் இசைவான கருத்துக்கள் நிலவட்டும்! முன்னாளில் தேவர்கள் எவ்விதம் தங்கள் பங்கினை ஒற்றுமையாக ஏற்றுக் கொண்டார்களோ, அவ்விதம் ஒற்றுமையாக இருப்போமாக!.*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 6 இதழ்: 6

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
City Union Bank,
Velachery Branch
A/c No. 510909010005286
IFSC : CIUB 0000262

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

## புத்தகத்தின் உள்ளே

| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு.. | 5 |
| சித்திரை மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 10 |
| ஸ்வதர்மம் | 13 |
| நாலடியார் | 15 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 16 |
| ஸ்ரீமத் பாகவதம் | 17 |
| தர்மத்தின் குரல் | 20 |
| மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 21 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 27 |
| பாரத தேசப் புனித யாத்ரை | 30 |
| சாதனைப் பறவைகள் | 33 |
| பசு சர்வரோக நிவாரணி | 36 |
| குயிலும், கிளியும் | 38 |
| புரோஹிதர் | 41 |

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய
சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் பிரிண்டஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064

# ஒரு நிமிடம் உங்களோடு.....

## "மனம்"

நம்முடைய புராணங்களில் உள்ள கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் நம்முடைய வாழ்க்கைக்கு வேண்டிய தத்துவங்களை ஏதாவது ஒரு வகையில் நம்முடைய மனதில் பதிய வைக்கின்றன. உலகில் நாம் எல்லோரும் அனுபவிக்கும் துன்பங்களும் இடையூறுகளும் தானாக வந்தது அல்ல நாமாக ஏற்படுத்திக் கொண்டவைதான்.

மஹாபாரத யுத்தத்தின் போது யுத்தகளத்தில் அர்ஜுனன் தன்னுடைய எதிரிகளை வெல்ல வேண்டும் என்று தேரில் அமர்ந்து தேரோட்டியான பகவான் ஸ்ரீ கிருஷ்ணனிடம் தேரை இரண்டு சேனைகளுக்கும் இடையில் கொண்டு நிறுத்தும்படி கூறுகிறான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அப்படியே செய்ய அர்ஜுனன் தான் யுத்தம் செய்ய வேண்டியவர்களில் முதல் வரிசையில் துரோணர், பீஷ்மர், துரியோதநாதியர்கள், முதலியவர்களை பார்க்கிறான். இதில் துரோணர், குரு பீஷ்மர், மற்றவர்கள் ஏதோ ஒரு வகையில் அவனுக்கு சொந்தம் ரத்த பந்தம் உள்ளவர்கள். அவர்களைப் பார்த்ததும் அர்ஜுனன் **"யுத்தம் செய்யமாட்டேன்"** என்று கூறி வில் அம்புகளைக் கீழே போட்டுவிடுகிறான். இதைக் கண்ட பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் **"யுத்தம் செய்யமாட்டேன் என்று நீ சொல்வது உனக்கு அழகல்ல"** என்று கூறினார். அர்ஜுனனுக்கு ஏற்பட்ட கலக்கம் இடையில் வந்ததுதான். அதை பகவான் கீதா உபதேசத்தின் மூலம் போக்கிவிட்டார், பிறகு அர்ஜுனன் யுத்தம் செய்து ஜெயம் அடைந்து **"விஜயன்"** ஆனான்.

இதுபோல் நமக்கும் மனக் கலக்கம் வந்தால் அதை ஆராய்ந்து அந்த கலக்கத்தை போக்க வழி காணவேண்டும்.

ஸ்ரீமத் பாகவதத்தில் பரீக்ஷித்து மஹாராஜா வேட்டைக்குப் போனபோது தாகத்திற்கு தண்ணீருக்காக அலைந்தபோது ஒரு ரிஷியைக் கண்டார், அவரிடம் போய் தண்ணீர் கேட்டான், அவர் நிஷ்டையில் இருந்ததால் அரசன் கேட்டது அவர் காதில் விழவில்லை, உடனே கோபம் கொண்ட

பரீஷித்து ஒரு செத்த பாம்பை அவர் கழுத்தில் போட்டுவிட்டு போய்விட்டான்.

(அதாவது நாம் விரும்பியது நமக்கு கிடைக்கவில்லை-யானால் அல்லது நடக்கவில்லையென்றால் நம்முடைய மூளை சரியாக வேலை செய்யாமல் ஏறுமாறாக வேலை செய்யும்)

அந்த ரிஷியின் மகன் தன் தந்தைக்கு ஏற்பட்ட அவமானத்தை தாங்கிக் கொள்ளாமல் "என் தந்தைக்கு இந்த கொடுமையை இழைத்தது யாராக இருந்தாலும் அவர்கள் இன்றிலிருந்து ஏழாவது நாள் **"தட்க்ஷகன்"** என்ற கொடிய நாகம் கடித்து மரணம் அடைய வேண்டியது" என்று சாபம் இட்டுவிட்டான், இதை அறிந்த பரீஷித்து தண்டனைக்கு மன்னிப்பு கேட்கவில்லை அவன் தன்னுடைய மனதை திடமாக வைத்துக் கொண்டு இந்த சாபத்திலிருந்து விடுதலை அடைய உள்ள முயற்சிகளை மேற்கொண்டான். 7 நாட்கள் ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் கேட்டு முக்தி அடைந்தான்.

அர்ஜுனனுடைய குழம்பிய மனதை தெளியவைப்பதற்கு **கீதை** என்ற மருந்து தேவைப்பட்டது, பரீஷித்துக்கு கலக்கம் இல்லாத மனது, ஆனால் கலக்கம் அடையவேண்டிய காரணம் இருந்தது, ஆனால் அவன் திடமான மனதுடன் அந்த கலக்கத்தை எதிர்கொண்டு அவனும் ஜெயம் அடைந்தான், இரண்டுபேருக்கும் உள்ள வித்தியாசம் அர்ஜுனனின் உடைந்து போன தனது மனதை பகவானின் உபதேசத்தால் சரி செய்துகொண்டான். பரீஷித்து மனது நன்றாக இருந்ததால் திடமாக இருந்ததால், அவனே தன்னை முன்னேற்றிக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆகையால் நாம் நம்முடைய மனதை திடமாக்கிக்கொண்டால் எல்லாவற்றிலும் ஜெயிக்கலாம், முன்னேறலாம். எல்லாவற்றுக்கும் காரணம் மனதுதான்.

**"மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்த மோட்க்ஷயோ"**

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# பிலவ வருஷம் - சித்திரை மாத விசேஷங்கள்

## (ஏப்ரல் 14.04.2021 முதல் மே 15.05.2021 வரை)

| | | | |
|---|---|---|---|
| 14.04.2021 | சித் 1 | புதன் | தமிழ் வருடப் பிறப்பு |
| 16.04.2021 | சித் 3 | வெள்ளி | சதுர்த்தி |
| 18.04.2021 | சித் 5 | ஞாயிறு | ஷஷ்டி, ஸ்ரீராமானுஜர் ஜெயந்தி |
| 21.04.2021 | சித் 8 | புதன் | ஸ்ரீராமநவமி |
| 23.04.2021 | சித் 10 | வெள்ளி | ஏகாதசி |
| 24.04.2021 | சித் 11 | சனி | துவாதசி |
| 26.04.2021 | சித் 13 | திங்கள் | சித்ரா பௌர்ணமி |
| 30.04.2021 | சித் 17 | வெள்ளி | சதுர்த்தி |
| 02.05.2021 | சித் 19 | ஞாயிறு | ஷஷ்டி |
| 07.05.2021 | சித் 24 | வெள்ளி | ஏகாதசி |
| 09.05.2021 | சித் 26 | ஞாயிறு | ஸ்ரீரமணமஹரிஷி ஆராதனை |
| 11.05.2021 | சித் 28 | செவ்வாய் | அமாவாசை |
| 12.05.2021 | சித் 29 | புதன் | ஸ்ரீ ஷ்யாமா சாஸ்திரிகள் ஜனனம் |
| 14.05.2021 | சித் 31 | வெள்ளி | அட்சய திருதியை |

## 14.04.2021 புதன்கிழமை - 'பிலவ' வருஷப்பிறப்பு

ஸ்ரீ பிலவ நாம ஸம்வத்ஸரே உத்தராயணே வஸந்த ருதௌ மேஷ மாஸே சுக்லபக்ஷே துவிதீயாயாம் புண்யதிதௌ ஸௌம்ய வாஸர: யுக்தாயாம் அபபரணீ நக்ஷத்திர யுக்தாயாம் விஷ்ணுயோக சைத்ர விஷு புண்யகாலே மேஷரவி ஸங்க்ரமண ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

## 11.05.2021 செவ்வாய்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ பிலவ நாம ஸம்வத்ஸரே உத்தராயணே வஸந்த ருதௌ மேஷ மாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாய புண்யதிதௌ வாஸர: யுக்தாயாம் அபபரணி நக்ஷத்திர யுக்தாயாம் விஷ்ணுயோக சைத்ர விஷு புண்யகாலே மேஷ ஸங்க்ரமண ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

# அட்டைப்பட விளக்கம்
# சித்ரா பௌர்ணமி

*இந்த மாத அட்டைப்படத்தை அலங்கரிப்பது* **"சித்ரகுப்தர்"**

*சித்திரை மாதத்தில் வரும் சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமியும் கூடிய நாள்தான்* **"சித்ரா பௌர்ணமி"**. *சித்திரை மாதத்தில் சூரிய பகவான் உச்ச பலம் பெறுகிறார்.*

*ஒரு மனிதன் இறந்த பிறகு அவன் செய்த பாவ புண்ணியங்களை கணக்கிட்டு அவனுக்கு சொர்க்கமா அல்லது நரகமா என்பதை தீர்மானிப்பது* **"எமதர்ம ராஜன்".** *இவர் தனக்கு ஒரு உதவியாளர் வேண்டும் என்று பகவானிடம் ப்ரார்த்திக்க, பகவான் அந்த கோரிக்கையை பிரம்மாவிடம் தெரிவித்தார். பிரம்மா தன் சரீரத்திலிருந்து ஓர் உருவத்தை சிருஷ்டித்தார். அவர் தலைப்பாகையும், கையில் எழுத்தாணி ஓலைச்சுவடியுடன், இடையில் தொங்கும் உடைவாளுடன் தெய்வீக களையுடன் தோன்றினார். அவர்தான்* **"சித்ரகுப்தர்"**. **"சித்ர"** *என்றால் ஆவணங்கள்,* **"குப்த"** *என்றால் ரஹஸ்யமான என்று பொருள். அவர் தான் எடுக்கும் மனிதர்களின் பாவ புண்ணிய கணக்குளை ரஹஸ்யமாக வைத்திருப்பதால் அவருக்கு* **"சித்ரகுப்தர்"** *என்ற பெயர்வந்தது. அவர் பிரம்மாவின் காயத்திலிருந்து (உடலிலிருந்து) தோன்றியதால் அவருக்கு* **"காயஸ்தர்"** *என்ற ஒரு பெயரும் உண்டு.* **"காயஸ்தர்"** *வம்சத்தைச் சேர்ந்தவர்கள் வட இந்தியாவில் வாழ்கிறார்கள். தமிழகத்தில் இவர்கள்* **"கருணீகர்"** *என அழைக்கப்படுகிறார்கள். அந்த சித்ரகுப்தர் அவதரித்த நாள்தான்* **"சித்ரா பௌர்ணமி",** *இந்த தினத்தில் சித்ர குப்தரை வழிபடுவதால் நீண்ட ஆயுளும், நோய்நொடி இல்லாத வாழ்வும் கிடைக்கும், எம பயமும் நீங்குவதோடு நம் பாவங்களையும் அவர் பொறுத்துக்கொள்வார் என்று முன்னோர்களால் சொல்லப்பட்டுள்ளது.*

*ஸந்த்யாவந்தனம் செய்யும்போது எல்லோரும் யமனையும், சித்ரகுப்தரையும் நமஸ்கரிக்கிறோம். ஸந்த்யாவந்தனத்தின் போது "யம வந்தனம்" செய்யும் போது சித்ரகுப்தருக்கு கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லி நமஸ்கரிக்கிறோம்.*

**ஓதும்$^{3}$பராய த$^{3}$த்நாய நீளாய பரமேஷ்டி$^{2}$னே**

**வ்ருகோத$^{3}$ராய சித்ராய சித்ரகு$^{3}$ப்தாய வை நம :**

இந்த ஸ்லோகம் மத்ஸ்ய புராணத்தில் வருகிறது.

**பொருள்** = மிக்க பலசாலியாக இருப்பவனுக்கும், 'தத்னன்' என்றபெயருடையவனுக்கும், எல்லோராலும் பூஜிக்கப்படுபவனுக்கும், பெரும் வயிறு உள்ளவனுக்கும், விசித்திரமாய் ரஹஸ்யத்தைக் காப்பவனுக்கும் நமஸ்காரம். ப்ரணவத்தால் குறிக்கப்பட்ட பரம் பொருளுக்கு நமஸ்காரம். மீண்டும் ரஹஸ்யத்தை காப்பவனுக்கு நமஸ்காரம்.

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கு வடக்கில் உள்ள நெல்லுக்காரத் தெருவில் சித்ரகுப்தருக்குத் தனிக்கோயில் உள்ளது. தேனி மாவட்டத்தில், தேனியிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ள "தீர்த்தத் தொட்டி'' என்றகிராமத்திலும் சித்ரகுப்தருக்கு ஒரு கோயில் உள்ளது.

இந்த வருடம் சித்ரா பௌர்ணமி 26.04.2021 திங்கள் கிழமை அன்று நிகழவுள்ளது. அன்றைய தினம் கீழ்க்கண்ட ஸ்லோகத்தைச் சொல்லி சித்ரகுப்தரை வழிபட்டால் சித்ரகுப்தரின் அருள் கிடைக்கும்.

**சித்ரகு$^{3}$ப்தம் மஹா ப்ராக்ஞம் லேக$^{2}$ணீ பத்ரதா$^{4}$ரிணம்**

**சித்ர ரத்னாமம்ப$^{3}$ரத$^{4}$ரம் மத்$^{4}$யஸ்த$^{2}$ம் ஸர்வ தே$^{3}$ஹிநாம்.**

**பொருள்** = சிறந்த அறிவும், ஞானமும் கொண்டவரும், எழுத்தாணி, ஏடு ஆகியவைகளை கைகளில் வைத்திருப்பவரும், அழகிய ரத்தினத்தாலான உடையை அணிந்திருப்பவரும், எல்லா உயிர்களுக்கும் நடு நிலைமையுடன் நீதி அரசராக விளங்குபவரான சித்ரகுப்தரே உமக்கு நமஸ்காரம்.

சித்ரகுப்தரின் அருள் பார்வை நம் எல்லோர் மீதும் பரவட்டும்.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்.**

---

28.02.2021, ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 முதல் 7.30 மணி வரை வேதபாரதியின் பெண்மையைப் போற்றுவோம் நிகழ்ச்சி ZOOM வழியாக மிகச்சிறப்பாக நடைபெற்றது. 100 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பெண்குழந்தைகள் நடத்திய ரஜஸ்வலா தொடர்பான கருத்தியல் மிகுந்த வரவேற்பைப்பெற்றது.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,

ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 24



## அத்தியாயம் – 2

## ஸாங்கிய யோகம்

**மாத்ராஸ்பர்ஸாஸ்து கௌந்தேய**
**ஸீதோஷ்ணாஸுக$^{2}$து$^{3}$ க$^{2}$த$^{3}$ா/**
**ஆக$^{3}$ மாபாயிநோ நித்யாஸ்தாம்ஸ்**
**திதிக்ஷஸ்வ ப$^{4}$ாரத// (கீதை 2-14)**

பொருள் : குந்தியின் மைந்தனே! தட்ப வெப்பம் மற்றும் சுக துக்கங்களைக் கொடுக்கக்கூடிய புலன்களுடன் போக விஷயங்களின் சேர்க்கைகள் உண்டாகி அழிபவை, அநித்யமானவை. ஆகவே பார்த்தா! நீ அவற்றைப் பொறுத்துக்கொள்.

நம்முடைய நாக்கு சுவையோடும், மூக்கு மணத்தோடும், காது சப்தத்தோடும் ஒட்டிக்கொள்கின்றன. தேகம் குளிர், வெப்பம் ஆகியவற்றை உணரவைப்பதன் மூலம் சுக துக்கத்தைக் கொடுக்கிறது. இவை எல்லாம் நிலையற்றவை. ஒரு டீயின் ருசி என்றும் இருக்கும் ஆனால் அந்த டீ தூளிற்கு ஜனனமும் உண்டு மரணமும் உண்டு. இனிப்பிற்கு ஜனனமும் இல்லை மரணமும் இல்லை. ஆனால் ஒரு லட்டு உருவாகிறது பின் அழிகிறது. "புளி" என்ற ருசிக்கு ஜனனமும் மரணமும் இல்லை. ஆனால் அந்த ருசி உள்ள புளி அழியக்கூடியது. நட்பிற்கு ஜனனமும் மரணமும் இல்லை. ஆனால் அந்த நட்பை காட்டும் இந்த சரீரத்திற்கு ஜனனமும் உண்டு மரணமும் உண்டு. ஆகையால் ஜனனம் மரணம் என்பது எல்லா ஸ்தூலங்களிலும் உண்டு. சூஷ்மத்தில் இல்லை. ஸ்தூலமானதெல்லாம் உண்டானதாகும். உண்டானதெல்லாம் சில காலம் நிலை நிற்கும் பின் அழிந்து போகும் அல்லது மரணம் அடையும்.

அதாவது வாழ்க்கையில் அனுகூலமும் வரும் பிரதிகூலமும் வரும். அனுகூலம் என்பது **"சுகம்"**, பிரதிகூலம் என்பது **"துக்கம்"**. அனுகூலம் வரும்போது நம் மனதில் "இதேபோல் எப்போதும் அனுகூலமாக எல்லாம் நடக்க வேண்டும்" என்று தோன்றும். பிரதிகூலம் வந்தால் "ஏன் இப்படி நடந்தது" என்று தோன்றும். வேண்டாத சிந்தனைகளை மனதிலிருந்து விலக்குபவர்கள் திடமானவர்கள். இப்படி உள்ளவர்கள் துக்கப்படமாட்டார்கள். சிலர் தங்களுக்கு சாதாரண ஜுரம் வந்தாலும் அதைப்பற்றி கற்பனை செய்து கொண்டு இப்படி ஆகுமோ, அப்படி ஆகுமோ, இதனால் கடைசியில் நமக்கு மரணம் வந்துவிடுமோ என்று வருந்துவார்கள்.

கார்கில் யுத்தம் வந்தபோது ஒரு சிப்பாய் கர்நாடகத்தில் உள்ள தன்னுடைய பெற்றோருக்கு போன் மூலம் "அப்பா யுத்தம் முடிந்துவிட்டது. நான் வீட்டிற்கு வரப்போகிறேன், என்னுடைய நண்பன் ஒருவரும் வரப்போகிறான். இதைச் சொல்லத்தான் நான் போன் பண்ணினேன்" என்று கூறினான். இதைக் கேட்ட அவனது பெற்றோர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து "மகனே இதில் என்ன கேட்கவேண்டியிருக்கிறது, உன் நண்பனை தாராளமாக அழைத்துவா" என்றார். அதைக் கேட்ட அவருடைய மகன் மீண்டும் "அப்பா நீங்கள் நான் இப்போது கூறப்போவதை எவ்வாறு ஏற்றுக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியாது. நான் அழைத்து வரவிருக்கும் என்னுடைய நண்பனுக்கு இரண்டு கால்களும், இரண்டு கைகளும் கிடையாது. அவன் யுத்தத்தில் அவற்றை இழந்துவிட்டான். அவனுடைய தாய் தந்தையும் அவனை வைத்து காப்பாற்றும் நிலையில் இல்லை அப்பா" என்றான். இதைக் கேட்ட அவனுடைய தந்தை "நீ அப்படிப்பட்டவனை அழைத்து வந்தால் அது நமக்கு ஒரு பாரமாக அமையும். நம்முடைய சுதந்திரத்தை அது பாதிக்கும். அவனைக் பார்த்துக் கொள்வதில் மிகுந்த கஷ்டம் ஏற்படும். அவன் அவன் வழியில் போகட்டும், நீ மட்டும் புறப்பட்டுவா" என்று கூறினார். இதைக் கேட்ட அந்த மகன் மேற்கொண்டு ஏதும் பேசாமல் போனை துண்டித்துவிட்டான்.

ஒரு வாரம் கழித்து அவனுடைய வீட்டிற்கு ஒரு தந்தி வந்தது. அதில் “உங்கள் மகன் மரணம் அடைந்துவிட்டார். உடனே புறப்பட்டு வரவும்” இதைக் கேட்ட பெற்றோர் உடனே காஷ்மீர் சென்று மார்ச்சுவரியில் இருந்த மகனின் உடலைப் பார்த்து அழுதனர். விவரம் கேட்டதில் அவன் தற்கொலை செய்து கொண்டான் என தெரியவந்தது. அவனுடைய முகத்தைப் பார்த்து அடையாளம் காட்டிய அவனது பெற்றோர் அவனுடைய உடலைப்பார்ப்பதற்காக அவன் மேல் போர்த்தியிருந்த துணியை விலக்கி பார்த்ததும் அவர்களுக்கு மின்சாரம் தாக்கியது போல் இருந்தது. காரணம் அவனுக்குத்தான் இரண்டு கால்களும், இரண்டு கைகளும் இல்லை. அவன் தன் தந்தைக்குப் போனில் கூறியது தன்னைப்பற்றித்தான். இந்த நிலையில் தன் பெற்றோர் தன்னை ஏற்றுக்கொள்வார்களா என்பதை அறியவே இப்படி ஒரு நாடகம் ஆடியுள்ளான்.

இதுதான் உலகில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்களின் மனது. எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளவும், தாங்கிக்கொள்ளவும் மனது பக்குவப்பட வேண்டும்.

இந்த நிலைதான் அர்ஜூனனுக்கும் ஏற்பட்டது.

கீதை தொடரும் ....

SPOKEN HINDI CLASSES
No Reading / No Writing
Hindi Prachar Sabha Exam
Parichaya - Praveen
HINDI TUITIONS
XI - XII State Board / VI - X CBSE & ICSE
9500191417

# ஸ்வதர்மம்

*மிகவும் ஆச்சரியமான, சுவாரஸ்யமான இயல்பை உடையது மனிதகுணம். ஒருவருடைய பிரத்யேக குணங்களை 100% இன்னொருவருடன் பொருத்திப் பார்க்க இயலாதது. ஏனைய ஜீவராசிகளிடத்தின் குணங்கள் ஏறத்தாழ பொதுவாக இருக்கும்.*

*உதாரணத்திற்கு சிங்கத்தின் குணம் வேட்டையாடுவது, குரங்கின் குணம் மரத்திற்கு மரம் தாவி விளையாடுவது, ஒரு செடியின் குணம் பூக்களை, காய்கறிகளை அளிப்பது. இவைகளைப் போல அல்லாது மனிதர்களின் குணம் மிகச் சிக்கலானது.*

*ஒரு மனிதன் அவன் வாழ்க்கையின் உயர்ந்த நிலையை அடைகிறான் என்றால், அதற்கு காரணம் அவன் தன் ஸ்வதர்மத்தை புரிந்து கொண்டு அதனை முழுமையாக உணர்ந்து செயல்படுவதால் தான்.*

*ஸ்வதர்மம் என்றால் என்ன?*

*'ஸ்வதர்மம்' அல்லது 'சுதர்மம்' என்பது ஒரு தனிநபரின் தனித்துவத்தையும் (ஸ்வபவா) மற்றும் அவருடைய பொறுப்புகளையும் (கர்மா) ஒட்டிச் செயல்படுவது. மனம், புத்தி, நினைவாற்றல் மற்றும் நமது உள்ஆன்மாவை ஒன்றிணைப்பது தர்மம்.*

*ஸ்வதர்மத்தை அறிவது எப்படி?*

*சில மனிதர்களுக்கு தன்னுடைய ஸ்வதர்மத்தை*

*இயல்பாகவே அறிய இயலும். உதாரணமாக சவுத் ஆஃப்ரிகாவில் பேரிஸ்டர் ஆக பணிபுரிந்த மோகன்தாஸ் கரம்சந்த், காந்திஜியாக மாறியது தன் ஸ்வதர்மத்தை உணர்ந்த பிறகு தான். அடையார் கேன்ஸர் இன்ஸ்டிடியூட் டாக்டர் சாந்தாவைப் போன்றவர்கள் தன் ஸ்வதர்மத்தை புரிந்து கொண்டு வாழ்க்கையை வகுத்துக் கொண்ட விதம், எத்தனை உயிர்களை காப்பாற்றியிருக்கிறது.*

*அதேபோல எத்தனையோ அறிவியல் வேலைகளையும், தேசத்திற்கே ஜனாதிபதியாக இருந்தாலும் கூட டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாமிற்கு மிகப்பெரிய திருப்தியையும்,*

மரியாதையையும் கொடுத்தது அவருடைய ஆசிரியப் பணி. அதனை அவருடைய ஸ்வதர்மம் எனலாம்.

வெகு சிலராலேயே ஸ்வதர்மத்தை தானாக உணர இயலும். மற்றவர்களுக்கு அது ஒரு நல்ல குருவிடம் இருந்தோ மகான்களிடம் இருந்தோ அறிவதற்கான வாய்ப்பு இருக்கும். மஹாபாரதப் போரில் மிகுந்த குழப்பத்தில் இருந்த அர்ஜுனனுக்கு ஸ்வதர்மத்தை உணர்த்தியவர் கிருஷ்ண பரமாத்மா. அர்ஜுனனின் ஸ்வதர்மமானது க்ஷத்ரியகுணம். பொதுவாக உயிர்பலி செய்வது அதர்ம செயல் ஆனாலும், ஒரு க்ஷத்ரியனின் தர்மத்தின் படி அதில் தவறில்லை.

பகவத் கீதையில்

**ஸ்ரேயாந்ஸ்வத$^{4}$ர்மோ விகு$^{3}$ண: பரத$^{4}$ர்மாத்ஸ்வநுஷ்டி$^{2}$தாத்/**
**ஸ்வத$^{4}$ர்மே நித$^{4}$நம் ஸ்ரேய: பரத$^{4}$ர்மோ ப$^{4}$யாவஹ://**

**(கீதை 3-35)**

வேறொருவரின் கடமையைச் செய்வதை விட, ஒருவரின் பரிந்துரைக்கப்பட்ட கடமைகளைச் செய்வதில் சில குறைபாடுகள் இருந்தாலும் அதைச் செய்வது நல்லது எனக் கிருஷ்ணர் கூறுகிறார்.

இதேபோல சுப்ரமணிய பாரதியாரின் மனம் கட்டுக்கடங்காமல் அலை பாய்ந்த போது சகோதரி நிவேதிதாவை குருவாக ஏற்றுக்கொண்ட பிறகு அவர் வாழ்க்கையில் செய்த ஆச்சரியங்கள் ஏராளம்.

சகோதரி.நிவேதிதாவின் குரு, "சுவாமி விவேகானந்தர்". அவரின் குரு இராமகிருஷ்ண பரமஹம்ஸர். இவ்வாறு நம் தேசத்தில் குரு பரம்பரை ஏற்படுத்திய விழிப்பும், எழுச்சியும், அதனால் உண்டான சமுதாய மாற்றங்களும் ஏராளம்.

ஸ்வதர்மத்தை ஒட்டி செய்யப்படும் செயல்கள் ஒரு தனிமனிதனுக்கு மட்டுமல்லாமல், தன்னை சுற்றியுள்ளவர்களையும் அடுத்த நிலைக்கு உயர்த்தக்கூடியது. இதனை இழக்காமல் இருக்கச் செய்ய வேண்டியது குருபக்தியை கைவிடாமல் இருப்பது முக்கியமானதாகும்.

**- வெ. சிவசங்கரி**

# நாலடியார்

## அதிகாரம் 2 – இளமை நிலையாமை

**எனக்குத்தாய் ஆகியாள் என்னைஈங் கிட்டுத்**
**தனக்குத்தாய் நாடியே சென்றாள் – தனக்குத்தாய்**
**ஆகியவளும் அதுவானாள் தாய்த்தாய்கொண்டு**
**ஏகும் அளித்திவ்வுலகு. (2-15)**

*எனக்குத் தாயாக இருந்தவள் என்னை இவ்வுலகத்தில் விட்டுவிட்டுத் தனக்கொரு தாயைத் தேடிப் போனாள் (இறந்துவிட்டாள்). அப்படிப் போன என் தாய்க்குத் தாயாக இருந்த என் பாட்டியும் தனக்கொரு தாயைத் தேடிச் சென்றாள். இந்த தன்மையாய் இந்த உலகம் ஒரு தாய் மற்றொரு தாயைத் தேடிக்கொண்டு செல்லும் எளிமை உடையது.*

*ஒருவர் எத்தனை இளமையோடும் அழகோடும் இருந்தாலும் ஒரு நாள் இறந்துவிடுவர் என்பது கருத்து.*

**புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி**
**இன்னினியே செய்க அறவினை – இன்னினியே**
**நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்**
**சென்றான் எனப்படுத லால் (2-29)**

*ஒருவன் இப்பொழுது நின்று கொண்டிருந்தான், உட்கார்ந்தான், படுத்தான். தன் உறவினர் அலறி அழ இறந்தான் என்று கூறப்படுவதால் புல் நுனியிலிருக்கும் நீர்த்துளியைப் போல நிலையில்லாத தன்மையுடையது இந்த உடம்பு என்று எண்ணி இப்பொழுதே அறவினைகளைச் செய்க.*

*“நேற்றுக்கூட பார்த்தேன் நன்றாகத்தான் இருந்தார். பாவம் அவருடைய மனைவியையும் தாயையும் அநாதையாக விட்டுவிட்டுப் போய்விட்டார்'' என்று சொல்லும் நிலை ஒருவனுக்கு வரும். ஆதலால் உடனுக்குடன் அறம் செய்ய வேண்டும்.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஶ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## தக்கத் தருணத்தில் இறைவன் தண்டிப்பார்



*சென்றமாத தொடர்ச்சி...*

*உடனே அவள் சிறிது நடுக்கத்துடன், "ஒரு வருடத்திற்கு முன்பு, நம் பக்கத்து வீட்டுக் குழந்தை இறந்து போனது உங்களுக்கு நினைவிருக்கிறதா?'' என்று கேட்டாள். உடனே அவன் மனதில் ஏதேதோ கற்பனைகள் தோன்ற ஆரம்பித்தன. அவன் முகம் வாடியது. இருப்பினும், அவளை உற்றுப் பார்த்து, 'ஆமாம் ஞாபகம் இருக்கிறது'' என்றான். அவள் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, 'அந்தக் குழந்தை இயற்கையாக இறக்கவில்லை. நான்தான் அதைக் கொன்று அதன் இரத்தத்தில் குளித்தேன். அதனால்தான் நமக்கு இந்தக் குழந்தை பிறந்திருக்கிறது'' என்று படபடப்புடன் கூறி முடித்தாள்.*

*மனைவியின் வார்த்தைகளைக் கேட்டதும், அவன் ஏறக்குறைய பைத்தியம் பிடித்தவனைப் போல் மாறிவிட்டான். அவன் மனம் சுழன்றது; உள்ளம் தடுமாறியது. ஆண்டவனைப் பார்த்து, 'இறைவா! உன் இராஜ்ஜியத்தில் இருள்தான் சூழ்ந்திருக்கிறது; நீதி இறந்துவிட்டது'' என்று சொல்லிக் கதறினான். தவறு செய்பவர்களை உடனே தண்டிக்காமல், அவர்கள் வேண்டுவதைக் கொடுக்கும் இறைவனின் செயலைப் பார்த்து அவன் வெறுப்படைந்தான். அந்த துயரத்தில் அவன் வீட்டை விட்டு வெளியேறி, மனம் போன போக்கில் பல மாதங்கள் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருந்தான். நீண்ட நாட்கள் கழித்து, சிறிது சிறிதாக அவனது உள்ளம் சாந்தமானது. பிறகு அவன் தனது கிராமத்தைப் போய்ச் சேர்ந்தான். அவனால் தனது வீட்டையே கண்டுபிடிக்க முடியவில்லை.*


தொடரும்...

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பாகவதம்

பரிதி

பகுதி - 4



*ஸ்ரீமத் பாகவத மஹாத்மியம் = மஹாத்மியம் என்றால் "மஹிமை" என்று பொருள். ஸ்ரீமத் பாகவத மஹாத்மியம் பத்மபுராணத்தில் ஆறு அத்தியாங்களில் வருகிறது. பிரம்ம குமாரர்களாகிய சனகாதி முனிவர்கள் (சனகர், சனந்தர், சனாதனர், சனத்குமாரர்) நாரதருக்கு குரு. அவர்கள் நாரதருக்கு ஸ்ரீமத் பாகவத மஹாத்மியத்தைச் சொல்லுகிறார்கள். நாரதர் பத்ரிகாஸ்ரமத்தில் சனத்குமாரர்களைப் பார்க்கிறார். அப்போது நாரதரின் முகம் வாடியிருப்பதைப் பார்த்த சனத்குமாரர்கள் நாரதரிடம் "உங்கள் முகம் வாடியிருப்பதின் காரணம் என்ன?" என்று கேட்கிறார்கள். அதற்கு நாரதர் சனத்குமாரர்களிடம் காரணத்தை கூறுகிறார்.*

*"பூலோகத்தில் நிறைய முக்தர்களும், சாதுக்களும் இருப்பார்கள் என்று சொன்னார்கள். அதனால் பூலோகத்திற்குப் போய் புஷ்கரம், ப்ராயாகை, காசி, கோதாவரி, குருக்ஷேத்ரம், ஸ்ரீரங்கம். சேது பந்தனம் ஆகிய இடங்களுக்கு ஒரு தீர்த்த யாத்திரை செய்தேன். எல்லா தீர்த்த க்ஷேத்ரங்களிலும் யாரும் சந்தோஷமாக இல்லை. பூலோகத்தில்* **"கலி"** *யின் அதர்மம் அதிகமாக இருக்கிறது. அதனால் அங்கு சத்யம், தயை, தானம் எதுவுமே இல்லை. எல்லோரும் பட்டினியால் வாடுகிறார்கள். எல்லோரும் பொய் சொல்லுகிறார்கள். ஒருவரை ஒருவர் ஏமாற்றுகிறார்கள். எல்லோரும் மந்த புத்தியுடன் வியாதியால் அவதிப்படுகிறார்கள். எல்லோரும் சொத்துக்களைச் சேர்ப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். ஆஸ்ரமங்களில் வெளிநாட்டவர்கள் கூடியுள்ளார்கள். எங்கும் கலியாகிய காட்டுத் தீ பரவியுள்ளது" என்று நாரதர் கூறினார்.*

*அவர் மேலும் கூறும்போது*

*"அப்படியே நான் போகும்போது யமுனா நதி கரையில்*

*ஒரு அதிசயத்தைப் பார்த்தேன். 10 வயது மதிக்கத்தக்க ஒரு அழகான இளம் பெண் மிகுந்த வேதனையுடன் உட்கார்ந்திருந்தாள். அவள் முன் இரண்டு வயதான கிழவர்கள் மூச்சு வாங்க படுத்திருந்தார்கள். அவர்கள் பக்கத்தில் நான்கு பெண்கள் அந்த முதியவர்களுக்கு சாமரம் வீசிக்கொண்டிருந்தார்கள் அந்த இளம் மங்கை என்னைக் கூப்பிட்டாள். நாள் அவள் இருந்த இடத்திற்குச் சென்று "நீ யார்? இந்த வயதான இருவரும் யார்? இந்த பெண்கள் எல்லாம் யார்? என்று கேட்டேன். அந்த பெண் ஆச்சர்யத்துடன் என்னைப் பார்த்து "உங்களுக்கே என்னை யார் என்று தெரியவில்லையா? நான்தான்* **"பக்தி"** *எனக்கு வயது 10. இந்த வயதான இருவரும் என்னுடைய பிள்ளைகள். ஒருவருக்கு வயது 90 மற்றவருக்கு வயது 80 ஒருவன் பெயர்* **"ஞானம்"** *மற்றவன் பெயர்* **"வைராக்யம்".** *கூட இருக்கும் இந்த பெண்கள் கங்கை, யமுனை, நர்மதை, கோதாவரி" என்று கூறினார்.*

*(10 வயது பெண்ணிற்கு எப்படி 90 மற்றும் 80 வயதில் புத்திரர்கள் இருக்க முடியும் என்று நினைக்கத்தோன்றும். "பக்தி", ஞான வைராக்கியத்திற்கு அம்மா. அதாவது பக்தியிலிருந்துதான் ஞான வைராக்யம் பிறக்கிறது. பக்தி இப்போதுதான் வளர்கிறது. பெரும்பாலானவர்களிடம் இப்போது இருப்பது* **"ப்ராக்ருத"** *பக்திதான் (பகவத் கீதை 18-ம் அத்தியாயத்தில் 28-ம் ஸ்லோகத்தில்* **"ப்ராக்ருத"** *என்பதற்கு அறிவு முதிர்ச்சி அடையாதவன் என்று பொருள் கூறப்பட்டுள்ளது) பக்தர்களுக்கு "ஞான" "வைராக்யம்" கிடையாது. தங்களுக்கு ஒரு காரியம் ஆவதற்காகத்தான் கோயிலுக்கும் போகிறார்கள். பக்தி எல்லோரிடமும் இருக்கிறது ஆனால் அது பகவானிடம் பூர்ணமாக இல்லை. அந்த காலத்தில் ஞானிகளிடம் ஞான வைராக்யம் இருந்தது. தற்போது அவை வீரியம் இல்லாமல் இருக்கிறது. அதனால்தான் அந்த "பக்தி" சின்ன பெண்ணாக இருக்கிறது. அதனுடைய குழந்தைகள் வயதானவர்களாக இருக்கிறார்கள்).*

*நாரதர் தொடர்ந்து, "அந்த "பக்தி" என்ற பெண் என்னிடம், என்னுடைய வயதான பிள்ளைகள் இருவரும்*

*பலஹீனர்களாக இருக்கிறார்கள். அவர்களை உங்களால் எழுப்ப முடியும்'' என்றாள். நான் அந்த வயதான ஞான வைராக்கியத்திடம் போய் அவர்களைத் தட்டி எழுப்பி அவர்களது காதுகளில் கீதா வாக்கியங்களையும், உபநிஷத் மந்திரங்களையும் உபதேசித்தேன். அப்போது அவர்கள் இருவரும் மெள்ள கண்களைத் திறந்து பார்த்துவிட்டு மீண்டும் தூங்கிவிட்டார்கள், என்னால் அவர்களை எழுப்ப முடியவில்லை. நான் அங்கிருந்து புறப்பட்டு வழியில் பலரிடமும் காரணத்தைக் கேட்டுக்கொண்டே பத்ரிகாஸ்ரமம் வந்தேன் உங்களைப் பார்த்தேன்'' என்று நாரதர் கூறி முடித்தார். அப்போது சனத்குமாரர்கள் நாரதரிடம் "சுகப்பிரம்ம ரிஷி பரிஷீத்திற்கு உபதேசம் செய்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை பாராயணம் செய்தால் பக்தி, ஞானம், வைராக்யம் ஆகிய மூவரும் சந்தோஷமடைவார்கள்'' என்றார்கள்.*

*மஹாத்மியம் தொடரும்...*

**புதிய வேத வகுப்புகள் துவங்க உள்ளன**
**(Online வழியாக)**

*வழிகாட்டுபவர் :*
**ஸ்ரீமான் கைலாஸ கனபாடிகள் அவர்கள்**
மேலும் தொடர்புக்கு :
*99949 26537 / 94451 02193*

*புதிய ஸ்லோக வகுப்புகள் :*
**நிகழ்த்துபவர் : ஸ்ரீமதி நீலா முரளி,**
**ஸ்ரீ முரளிதரன் ஜி மதுரை**
தொடர்புக்கு : *9443489129*

**பெண்மையைப் போற்றுவோம்**
**பெண்குழந்தைகளுக்கான**
**விழிப்புணர்வு வகுப்புகள்**
தொடர்புக்கு : *94434 95950*

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்

*சென்றமாத தொடர்ச்சி....*

*மேனாட்டுப் படிப்பின் காரணமாக நமது பழக்கவழக்கங்கள், சம்ப்ரதாயங்கள் ஆகியவற்றைக் கைவிட்டவர்கள் கூடத் தம் பிள்ளைகளுக்குக் கண்டிப்பாக உபநயனம் செய்கிறார்கள். அவர்களிடையே கூட வேதங்கள் படிப்பது, பூஜைகள், ஹோமங்கள் செய்வது ஆகியவை அதிகரித்து வருவதை நாம் காணமுடிகிறது. இவற்றிற்கெதிராகச் சிலரிடமிருந்து எதிர்ப்புகள் இருந்தாலும், மக்கள் அவற்றைப் பொருட்படுத்தவேயில்லை. நினைவுக்கெட்டாத காலந்தொட்டு, வஞ்சகம் மிக்க கொடுங்கோலர்கள், அவற்றை ஒழிக்கத் தொடர்ந்து முயன்று வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வெற்றி பெறவில்லை. அன்னிய நாடுகளில் குடியேறியுள்ள பல ஆண்களும் பெண்களும் அந்தந்த இடங்களில், வேத மரபுகளுக்குப் புத்துயிர் கொடுத்து வருகிறார்கள். வேதத்தின் விதிகளை கடைப்பிடிக்காததற்காக யாரும் தண்டிக்கப்படப் போவதில்லையென்றாலும், அவர்கள் அவற்றை மதித்துக் கடைப்பிடிக்கிறார்கள். வேதத்தின் வேர்கள் ஆழமானவை, உறுதியானவை. எவரும் அவற்றை மாற்ற முடியாது.*

*வேதங்களுக்கு மக்கள் இத்துணை மரியாதை ஏன் கொடுக்கிறார்கள்?*

*வேதவிதிகளை அனுசரித்து நடந்தால் உலக சுகங்களை அனுபவிக்கமுடியும். அவ்வாறு நடக்காவிட்டால் நீங்கா துன்பத்தைத் தரும் என்பன ஒருவரின் நேரடியான சொந்த அனுபவமாக இருந்தால், வேதங்கள் மீது மக்களின் மரியாதை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆனால், அது அவ்வாறு இல்லை. வேதங்களைப் பற்றி ஒன்றுமே அறியாத சில சமுதாயங்கள், உலக வாழ்வில், நம்மை விடச் சுபிட்சமாக இருப்பதை நாம் காண்கிறோம்.*

*தொடரும்...*

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

### பிரம்மச்சரியம்



''ப்ரம்மச்சரியம்'' என்பது வேதாத்தியயனம் பண்ணுவதற்காக ஏற்பட்ட ஒரு "தீக்ஷை". அதற்குப் பூர்வாங்கமாக ஏற்பட்ட ஒரு காரியம் "உபநயனம்", "பரிஷேசனம்" என்று ஜலத்தால் சாதத்தைத் தெளிப்பது எதற்கு? அது போஜனத்திற்கு அங்கம். சாதத்தை அப்படியே சாப்பிட்டு விடக்கூடாது. ஈச்வரப் பிரஸாதமாக்கிச் சாப்பிட வேண்டும் என்றே முதலில் அதன் மேல் ஜலம் தெளிக்கிறோம். இப்படிச் செய்துவிட்டு சாப்பிடாமல் இருந்தால் எத்தனை அசட்டுத்தனம்? உபநயனம் பண்ணிவிட்டு வேதாத்தியயனம் பண்ணாமலிருப்பது, பரிசேஷனம் பண்ணிவிட்டு சாப்பிடாமலிருப்பதைப் போன்றது. இப்போது அத்தனை பேரும் இப்படி அசடுகளாக இருந்து வருகிறோம். "உபநயனம்" என்ற பூர்வாங்கத்திற்கும் ''ஸமாவர்த்தனம்'' என்கிற உத்தராங்கத்திற்கும் நடுவில் நான்கு விரதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நம்முடைய தக்ஷிண தேசத்தில் பெரும்பாலும் அநுஷ்டானத்திலுள்ள க்ருஷ்ண யஜுர் வேதத்தை எடுத்துக் கொண்டால், அவை பிராஜாபத்யம், ஸௌம்யம், அக்னேயம், வைச்வதேவம் என்பவை.

தொடரும்....


99940 89133



99940 89140

SRI SASTHA CATERING



We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
www.woppershop.com
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
WOPPER
Fluid Chemistry

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் **"இலவச காப்பகம்"**



V.KRISHNAMOORTHY
Managing Trustee



P. AKASHRAM
Executive Trustee



Valasai K JAYARAMAN
Executive Trustee



"கோழி தன் குஞ்சுகளை அடைகாப்பது போல" அடையாறு கேன்சர் மருத்துவ மனைக்கு வரும் வெளியூர் ஏழை புற்றுநோயாளிகளை தாயுள் ளத்துடன் அரவணைத்துக் கொள்கிறது ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் **நம்ம தர்மசாலா**. அவ்வாறு, இருண்டு விட்ட தங்களது எதிர்காலத்திற்கு ஓர் வெளிச்சம் தேடி நம்ம தர்மசாலாவில் தஞ்சம் புகும் ஏழை புற்றுநோயாளிகளுக்கும், அவர்க ளது ஒரு உதவியாளருக்கும் நம்ம தர்மசாலா வில் சுகாதாரமான தங்குமிடம்; மூன்று வேளை உணவு ஆகியவை புற்றுநோயாளிகளின் சிகிச்சை காலம் முழுவதும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப் படுகிறது. இதன் மூலம் ஏழை புற்றுநோயாளிகள் முறையான சிகிச்சையை தடையின்றி பெற்று விரைவில் நலம் பெறுகிறார்கள்.

நிதியுதவி வழங்க விரும்பும் அன்பர்கள் விரும்பினால் "கொரோனா கால கட்டுப்பாடுகளுடன்" **நம்ம தர்மசாலா**விற்கு விஜயம் செய்து, ஏழை புற்றுநோயாளிகளிடம் உரையாடி, அவர்களுக்கு தங்கள் கரங்களினால் உணவு பரிமாறி மகிழலாம்.

ஏழை புற்றுநோயாளிகளுக்கான சேவையை தொடர்ந்து ஸ்ரீ மாதா டிரஸ்ட் மற்றுமொரு ஒப்பற்ற சேவையாக **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்லம்** என்கிற ஆதரவற்ற முதியோர் களுக்கான ஓர் இலவச சரணாலயத்தை செங்கல்பட் டுக்கு அடுத்த மாமண்டூரில்



காற்றோட்டமான சூழ்நிலையில், விஸ்தாரமான அறைகளுடன் முதலுதவி வசதி மற்றும் இலவச ஆம்புலன்ஸ் சேவையுடன், தரை தளம் மற்றும் 2 தளங்களுடன் சுமார் 30,000 சதுர அடி பரப்பளவில் ஸ்தாபித்திட உள்ளது. ஓர் சிறப்பான முதியோர் இல்லத்திற்கு உதாரணமாய் இருக்கும் வகையில் அமையவுள்ள நமது முதியோர் இல்ல கட்டுமானப் பணிகள் முன்னணி நிறுவனமான Arun Excello நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது. சுமார் **ஆறு கோடி** ரூபாய் செலவில் கூடிய விரைவில் செயல்படவுள்ள நம் முதியோர் இல்லம் சிறப்புடன் செயல்பட உங்களது தாராள நன்கொடையையும், நல்லாசிகளையும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் என்றென்றும் வேண்டுகிறது.



**தங்களது சொத்துகளுக்கு வாரிசு இல்லையே** என்று ஏங்குவோர் ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்லத்திற்கு உதவுவதன் மூலம் தங்கள் மனவேதனையை நிரந்தரமாய் நிவர்த்தி செய்துகொள்ள முடியும். மேலும், ஊசிமுனையளவும் உங்கள் மீது அன்பு காட்டி உதவி செய்யாத உறவினர்களுக்கும் வளர்ப்புகளுக் கும் அவர்களது சந்ததியினருக்கும் உங்கள் சொத்து மொத்தமாக சென்று சேர்வதைக் காட்டிலும் **இந்த நற்செயல் மிக உயர்ந்த புண்ணியம் அல்லவா? சிந்திப்பீர்... இன்றே செயலாற்றுவீர்...**

இம்முதியோர் இல்லத்தின் கட்டிட நிதியாக ரூ.5,00,000/- வழங்குவோர் விரும்பும் பெயரில் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். நமது வளமான வாழ்விற்கு வழி வகுத்த நமது பெற்றோர்களின் பெயர்களை காலத்தின் கல்வெட்டில் நிரந்தரமாக இடம்பெறச் செய்வது நமது கடமைகளில் முதன்மையான கடமையல்லவா! நம் பெற்றோர்களுக்கு வார்த்தைகளால் சொல்ல முடியாத நன்றியை, நமது இச்செயல் காலத்துக்கும் உரைத்துக் கொண்டிருக்கும் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை. மேலும் இப்புனித பணிக்கு தாங்கள் விரும்பும் தொகையை நன்கொடையாக வழங்கலாம். அவ்வாறு வழங்கும் நன்கொடையாளர்களின் பெயர்கள் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.




இவ்வுலகில் ஒவ்வொரு ஜீவனுக்கும் தாய் - சகோதரி - மனைவி - மகள் என வாழ்வின் எல்லா நிலைகளிலும் அன்பையும், தியாகத்தையும் அள்ளித் தரும் மகளிரைப் போற்றிடும் வகையில், நம்ம தர்மசாலா வில் தங்கியுள்ள மகளிர் அனைவருக்கும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகி திரு.அமெரிக்கன் சேலைகள் வழங்கி மகிழ்ந்தார்.




தகவல் பரிமாற்றத்தின் தலைப் பிள்ளையாய், அக்காலம் முதல் இக்காலம் வரை பல்வேறு சேவை களை, காற்றின் வாயிலாய் நம் காதுகளுக்கு கொண்டு வந்து சேர்க்கும் **ஆல் இந்தியா ரேடியோ** சென்னை, அலுவலகத்தில் 8.3.2021 அன்று மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அவ்வினிய விழாவில், கடந்த 21 வருடங்களாக ஏழை புற்றுநோயாளிகளை பாதுகாத்து வரும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் சேவைகளைப் பாராட்டி, அதன் Deputy Director General அவர்கள் ஏழை புற்றுநோயாளி களுக்கு உணவு வழங்கிட, ஸ்ரீ மாதா டிரஸ்ட் சேவகர் திரு ஜவஹர் அவர்களிடம் நன்கொடை வழங்கி மகிழ்ந்தார்.

## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம் ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்

ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா" வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்

ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்

ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்

ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / M.O.

Account Name : SRI MATHA TRUST

Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20

Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. 9500001065 / 9003247857

vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 3 பகுதி - 4

*2020-ம் ஆண்டு முடிந்து 2021-ல் காலூன்றிவிட்டோம். இதோ தமிழ் புத்தாண்டு நம்மை வாழ்த்த வந்துவிட்டது.*

*2020-ம் ஆண்டை இந்த உலகம் மறக்க முடியாது. நம் அனைவரின் வாழ்வையும் "சட்" என்று மாற்றிவிட்டது. மறக்க முடியாத, மறக்கக் கூடாத இறைவனை சரணடைய வைத்த ஆண்டு.*

*உலகையும், வாழ்க்கையையும் அதிகம் புரிந்து கொள்ள இயலாத பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மணிகளின் வாழ்க்கையை புரட்டிப் போட்டுவிட்ட ஆண்டு.*

*பள்ளிக்கு அனுப்புவது எப்படி, தயார் செய்து அனுப்பும் பாடு, போகிற வருகிறவழியில் ஏற்படும் இடர்பாடுகள், சாப்பாடு கட்டும் அவதி, பள்ளிச் சீருடை தயார் செய்வது, "ஸாக்ஸ் எங்கே'' எனும் அலறல்கள் என்று பலவிதமான "படபடப்புகளை'' ஆன்லைன் வகுப்புகள்' முடிவுக்கு கொண்டு வந்துவிட்டன.*

*எந்த விஷயமாக இருந்தாலும் அதற்கு மறுபக்கம் என்று ஒன்று உண்டல்லவா? ஆன்லைன் வகுப்புகளின் சௌகரியங்கள் பற்றி உங்களுக்கு தெரியும். அதன் பிரச்சனைகள் என்ன, அதனை எப்படி தீர்ப்பது என்று நாம் பேசுவோம்.*

*பிரச்சனைகள் மூன்று விதமாகப் பிரிக்கலாம். தினம் தினம் புதிது புதிதாக கற்றுக் கொள்ளும் வேகம், நேர மேலாண்மை, ஒத்த வயதினரோடு சமமான தொடர்பு இல்லாததால் ஏற்படும் தனிமை மற்றும் மன நல பாதிப்பு என்று மூன்றுவித பிரச்சனைகளையும் பெற்றோர்களான நீங்கள் கையாள வேண்டும். இதில் முதல் பிரச்சனையைக் காணலாம்.*

**"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி". (குறள் – 418, அதிகாரம் – 42)**

*“கேள்வி எனும் அறிவால் துளைக்கப்படாத ஒருவரின் செவிகள், இயற்கையான துளைகள் பெற்று, செவிகள் நன்கு கேட்டாலும், செவிட்டுத்தன்மை கொண்ட செவிகள் தான்” என்கிறார் வள்ளுவர் பெருமான்.*

*“அம்மா போர் அடிக்குது'' “அம்மா ''கஷ்டமா இருக்கிறது” “டீச்சர் அப்படியே புத்தகத்தைப் படிக்கறாங்க” இப்படிப்பட்ட பல்வேறு குறைகளை உங்கள் குழந்தை தினமும் உங்களிடம் கூறினால், மேற்கண்ட குறளை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.*

*“எப்படிக் கற்றுக் கொடுக்கிறார்கள்'' என்று குறைகாண்பதை விட, ஆசிரியப் பெருமக்களுக்கும் இது புதிது. ஆன்லைனில் இருக்கும் பொழுதே “சட்” என்று மின்சாரம் போய்விடுவது, இரண்டு அறைகள் கொண்ட புறாக்கூண்டு அடுக்குமாடி பிளாட்டுகளில், குழந்தைகளின் ஆன்லைன், கணவரின் ஆன்லைன், மாமியார் – மாமனாரின் ஆஃப்லைன் அவதிகள் இவற்றையெல்லாம் சமாளித்து படிப்பு எப்படி கற்றுத் தருவது எனும் குழப்பத்துடன் ஒவ்வொரு ஆசிரியரும் படும் அவதிகளை எடுத்துக் கூறுங்கள்.*

*சரி, பள்ளி திறந்தவுடன் அதே ஆசிரியர்கள் கையில் சானிடைசருடன் நிற்கும் பரிதாபக் காட்சிகளை நாம் பார்த்தோம்.*

*ஆசிரியப் பெருமக்களை பொருத்தவரை, மாணவர்களைப் போன்றே, பள்ளிச்சூழல் இல்லாமல் அவதிப்படுகின்றனர் என்பது தான் நிதர்சனமான உண்மை.*

*இதன் அடிப்படையில் இருக்கும் ஒரு விஷயத்தை பெற்றோர்கள் புரிந்து கெள்ள வேண்டும். “டெக்னாலஜி” மீது மிக மிக அதிகமான சார்புத்தன்மை என்பது மன நிலையை நிச்சயம் பாதிக்கும்.*

*இன்று கோடிக்கணக்கான மக்கள் உலகம் முழுவதும்* 'Work From Home' (WFH) *எனம் சதா மாறிக்கொண்டேயிருக்கும் கட்டமைப்புக்குள் செல்லும் கட்டாயத்தில் இருக்கின்றார்கள்.*

*மாணவர்கள் முதல் கம்பெனி முதலாளிகள் வரை வயது வித்தியாசமின்றி கற்றுக் கொண்டேயிருக்க வேண்டியுள்ளது என்பது தான் உண்மை.*

இத்தகைய சூழலில் மாணவர்களான நம் குழந்தைகளை விரட்டுவதும், மார்க் வாங்க நச்சரிப்பதையும் தவிர்த்து விடுங்கள். "உனக்கு புரிந்ததை நீ படி, புரியாததை வீட்டில் யாராவது ஒருவரின் உதவியோடு உனக்கு புரிய வைக்கிறோம். மதிப்பெண்கள் பற்றி கவலைப்படாதே'' என்று மனதை சமாதானப்படுத்துங்கள்.

மிக வேகமாக கற்பது என்பது எல்லோருக்கும் எளிதல்ல. அதனால் அன்பான ஊக்குவிப்பு மிக அதிகமாக தேவை என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தொடரும்....

STAR
Personal and Caring
India's First Stand Alone Health Insurance Company

உங்கள் மருத்துவம்! எங்கள் செலவில்!!

உங்கள் உழைப்பும், அதனால் உருவாகிய சேமிப்பும்
உங்கள் குடும்பத்திற்கு அவசியம் தேவை.

அவசர காலத்தில் மருத்துவ செலவிற்கு என்ன செய்வீர்கள்?

- நகை அடமானம் வைப்பீர்களா?
- பிக்செட் டெபாசிட்டை உடைப்பீர்களா?
- நண்பர் மற்றும் உறவினரிடத்தில் கடன் வாங்குவீர்களா?
- சிகிச்சை மற்றும் மருத்துவமனையின் தரத்தை குறைத்துக்கொள்வீர்களா?
- ஓர் அதிசயம் நடப்பதற்காக இறைவனிடத்தில் வேண்டுவீர்களா?

✔ முன்னெச்சரிக்கையாக மருத்துவ காப்பீடுகளை எடுத்துக்கொள்ளுங்கள்

இன்றைய சூழலில் மருத்துவச் செலவு வரும் முன்
மருத்துவ காப்பீடு மிக மிக அவசியம் என்பதை உணர்ந்து
'' மருத்துவக்காப்பீடு திட்டத்தில் இன்றே இணையுங்கள் ''

மேலும் எமது சிறப்பு சேவைகள்:-
குடும்பம் மற்றும் தனிநபர் காப்பீடு, மூத்த குடிமக்கள் காப்பீடு,
சர்க்கரை நோயாளிகள் காப்பீடு, இருதய நோயாளிகள் காப்பீடு,
புற்று நோய் காப்பீடு, விபத்து காப்பீடு திட்டத்தில் இணைந்து பயன்பெறுங்கள்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

The Health Insurance Specialist
STAR
Personal and Caring
Narayanan. S
Cell : 93602 77372

# "பாரத தேசப் புனித யாத்ரை"

திருச்சி **K.கணேசன்**

*'அத்யாயம் - 11'*

*இந்த பஞ்ச கட்ட தீர்த்த ஸ்ராத்தத்திற்காக எங்களுடன் போட்டில் சென்னையிலிருந்து ஒரு தம்பதியினரும் வந்தனர். அந்த கணவர் ஒருவிபத்தினால் இடுப்புக்கு கீழே இரண்டு கால்களும் இழந்தவர். ஆனாலும் அவர்கள் மிகுந்த மனஉறுதியுடன் அனைத்துக் கட்டங்களிலும் ஸ்ராத்தம் முதலியவற்றைச் செய்ததைப் பார்த்த போது சிலர் 'எங்களுக்கு வயதாகிவிட்டது, சிறு வயதில் காசி, கயா செல்ல பணவசதியில்லை. ஆனால் இப்போது வசதி உள்ளது ஆனால் உடம்பில் தெம்பு இல்லை" என்று கூறுவதை கேட்டிருக்கிறேன். இந்த தம்பதியினரைப் பார்த்த பின்னர் மனமிருந்தால் யார் வேண்டுமானாலும் ஸ்ரத்தையுடன் செய்ய முடியும் என்பது புரிந்தது.*

*இந்த ஐந்து கட்டங்களிலும் அவரை போட்டிலிருந்து கீழே கங்கையில் இறங்க வேண்டாம் என்று கூறிய சாஸ்திரிகள் என்னிடம் ஒரு சிறிய வாளியைக் கொடுத்து ஒவ்வொரு கட்டத்திலிருந்தும் கங்கை நீரை எடுத்து போட்டில் அமர்ந்து உள்ள அவருக்கு ஊற்றுமாறு கூறினார். நானும் அவருக்கு (ஸ்ரீசுந்தரேசனுக்கு) அபிஷேகம் செய்வது போல் (மன்னிக்கவும் காசியில் ஸ்ரீ விஸ்வநாதருக்கு என்றுதான் சொல்ல வேண்டும்) மனப்பூர்வமாக அபிஷேகம் செய்தேன் . அவரின் மனைவியும் நவீன நளாயினி போல் மாமாவிற்கு அனைத்துக் காரியங்களிலும் சலிக்காமல் முகம் சுளிக்காமல் சேவை செய்ததைப் பார்ப்பதற்கு ஸ்ரீ விஸ்வநாதரும் அன்னை ஸ்ரீ விசாலாட்க்ஷியும் போட்டில் எங்களுடன் வந்து அநுக்கிரஹித்தது போலவே இருந்தது.*

*போட்டை ஓட்டும் போட்காரனுக்கு பலவருட பழக்கத்தின் காரணமாக அனைத்து விஷயமும் நன்கு தெரிகிறது. ஒரு மாமி கேட்டார்கள் போன கட்டத்தில் வெங்கலப் பானையில் சமைத்த சாதம் சிறிது ஒட்டி உள்ளது. சரியாக தேய்க்கவில்லை என்றதற்கு போட்காரன், 'மாமி எல்லா*

*கட்டத்திலும் உங்கள் பித்ருக்கள் மாறவில்லை எனவே அந்த சாதம் சிறிது ஒட்டியிருந்தால் ஒன்றும் தவறு இல்லை'', என்றான். விட்டால் சாஸ்திரிகள் கூற வேண்டிய பிண்ட பித்ருதான மந்திரத்தையும் பல நாட்கள் பழக்கத்தின் காரணமாக அவனே கூறிவிடுவான் போல எனக்குத் தோன்றியது.*

*இவ்வாறு அனைத்து கட்டங்களிலும் தீர்த்த ஸ்ராத்தம் முடித்து விட்டு திரும்பி வரும் வழியில் சங்கரமடம் அருகில் உள்ள ஸ்ரீதத்தாத்ரேயர் கோவில் பார்த்தோம். சங்கரமடத்தில் ஸ்ரீ தேவி மகாத்மியம் முழுவதும் நன்கு பெயிண்ட் செய்யப்பட்டு இருந்தது. பெங்கால் தோலா ஸ்கூல் அருகில் உள்ள சந்தில் சிறிது தூரம் உள்ளே நடந்து சென்றால் தில் பாண்டேஸ்வரர் கோவில் இருக்கிறது. இந்த கோவில் துக்கா குண்டில் உள்ள துர்கா கோவில் அருகில் உள்ளது.இந்த சிவன் தினமும் ஒரு எள் அளவு வளர்கிறார். சுரங்கம் போன்ற இடத்தில் சுயம்பு சனைஸ்வரர் மற்றும் ஸ்ரீ சீதளா தேவி இருக்கின்றனர்.*

*காசியிலும், நாம் நம் தாய் / தந்தைக்கு முதல் வருஷமாய் ஆப்தீகம் செய்யும் பொழுது கொடுக்கும் தசதானம் மற்றும் பஞ்ச தானம் செய்ய வேண்டும். ஜனவரி 2021 இதழில் (அத்யாயம் 8-ல்) இதைப்பற்றி விரிவாக எழுதுவதற்கு விட்டுப் போய்விட்டது.*

*தசதானங்கள் என்பவை கோதானம், (பசுமாடு அல்லது இதற்கு பிரதியாக மட்டைத் தேங்காய், தக்ஷிணையுடன் தரலாம், பூமி தானம், எள் தானம், பொன் தானம், நெய் தானம், வஸ்திர தானம், வெல்லம் தானம், வெள்ளி தானம், உப்பு தானம் & தான்யம் தானம் என்று சாஸ்திரமும், பண்டிதர்களும் கூறுகின்றனர்.*

*பஞ்சதானம் என்பவை பித்தளை சொம்பு ஜலத்துடன், பூஜை மணி, வேத புஸ்தகம், 9 x 5 வேஷ்டி, மற்றும் நெய் தீபம் ஏற்றி தீப ஜோதி கர்த்தாவை பார்த்து இருக்குமாறு வைத்துக் கொண்டு தானம் செய்ய வேண்டும்.*

*''பூர்ணமான ஆயுளை விரும்பும் நான் எல்லா தெய்வங்களுக்கும் உகந்த கன்றுடன் கூடிய பசுவை பால் கறக்கும் பாத்திரத்துடன் தக்ஷிணை மற்றும் தாம்பூலத்துடன் ஸாம்பசிவ ஸ்வரூபமாகிய பிராம்மணராகிய தங்களுக்கு*

*அளிக்கின்றேன். இனி இவை என்னுடையது அல்ல" என்று கூற வேண்டும். இவ்வாறு தசதானம் மற்றும் பஞ்ச தானத்தை காசியிலும் செய்ய வேண்டும்.*

*நாங்கள் திருச்சியிலிருந்து காசியாத்ரை புறப்படுவதற்கு முன்னதாகவே என்னுடைய அண்ணா மற்றும் மன்னியின் (அண்ணி) ஆசிகள் பெறுவதற்காக போனில் தொடர்பு கொண்டு நமஸ்கரித்த போது, இரண்டு முறை மானசரோவர் மற்றும் கைலாய யாத்ரை சென்று வந்த டாக்டர் கே.தியாகராஜன், மூத்த மனநல மருத்துவர் & என் மன்னி டாக்டர் உமா மகேஸ்வரி, மூத்த மகப்பேறு மருத்துவர், தம்பதியாகிய இவர்கள், "பானு ஸப்தமி அன்று காசியில் உள்ள 12 ஆதித்யர்களை தரிசித்தால் மிகவும் புண்ணியம்" என்று கூறி அதற்கான தகவல்களையும் விரிவாகக் கூறினார்கள்.*

*19.04.2015 ஞாயிறு ஒரு மிகச்சிறந்த நாள் ஆகும். காசியில் பானு ஸப்தமி அன்று, அதாவது ஞாயிற்றுக்கிழமை அன்று ஸப்தமி திதியும் கூடிவந்தால் அதனை "பானு ஸப்தமி" என்பர். ஆனால் நாங்கள் காசியில் இருந்த நாட்களில் ஸப்தமி திதி வரவில்லை (ஞாயிறு அன்று) ஆனால் 19.04.2015 ஞாயிற்றுக்கிழமை. எனவே அன்று நாங்கள் இருவரும் 12 ஆதித்யர்களை தரிசிக்க எண்ணி காலை 6.15 மணிக்கு அஸிகாட் ரோடில் நடந்து, சிவாலயா காட் தாண்டி லோலார்கர் ஆதித்யரை தரிசித்து பெரிய சிவலிங்கத்திற்கு கங்கை நீரால் எங்கள் கைப்பட அபிஷேகம் செய்தோம். பிறகு நடந்தே "ஜங்கம் பாரி" சென்று விமலாதித்யரை சந்தித்தோம்.*

தொடரும்....

**ஜாதக பரிவர்த்தனைக்கு**

புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

**ஸ்ரீ நடராஜன் - 9443103404**

# சாதனைப் பறவைகள்

*(சாதாரணப் பெண்களின் அசாதாரண வெற்றிக் கதைகள்)*

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**



*கலைமாமணி பொன்னுதாயி – முதல் பெண் நாதஸ்வர கலைஞர்*

**“மிகப்பெரிய சாதனையாளரின் சகாப்தம் சத்தமில்லாமல் முடிந்தது. அதன் பின்னரும் அவர் குறித்து சிலாகிப்பவர்கள் இல்லை”.**

*இந்த வரிகள் தான் இவரைப்பற்றி நான் எழுதுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. ஆண்களின் கோட்டையாகவே இருந்து வந்த ஒரு இசைத் துறையில் ஒரு சிறிய கிராமத்தின், எளிய குடும்பத்தைச் சார்ந்த ஒரு பெண்மணி தேசிய அளவில் மாபெரும் சாதனைகளைப் புரிந்திருப்பது மிகப் பெரிய விஷயம்.*

**“முதல் பெண் நாதஸ்வர வித்வான்”** *என்ற புகழை மூன்று தலைமுறைக்கு முன் ஒரு கிராமத்துப் பெண் பெறுவது என்றால் அதற்குப் பின், எத்தகைய இசை ஆர்வமும், சுய உழைப்பும், குடும்பத்தினரின் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும் என்று யோசித்துப் பார்க்கவே திகைப்பாக இருக்கிறது. ஆலயத்திலிருந்து ஆண்டவன் எழுந்தருள வேண்டும் என்றால் கூட, மங்கள நாதஸ்வர இசை முழக்கம் இல்லாமலா சாத்தியமாகும்? எனவே இத்தொடருக்கான முதல் மரியாதையை நாதஸ்வரநாயகியான, பொன்னுத்தாய் அம்மாவிற்கே அளிக்க விரும்புகிறேன்.*

*அடுப்பூதும் கைகளில் மங்கள வாத்தியமான நாதஸ்வரத்தைக் கொடுத்துத், தன் பெண் குழந்தையை உலகளாவிய அளவில் பரிமளிக்கச் செய்த அவரின் தாய் தந்தையருக்கு நமது முதல் வணக்கம். சுப்புத்தாய் (பாப்பம்மாள்) ஸ்ரீபதி தம்பதியினருக்கு, 5.07.1929 அன்று பழனி அருகே புது ஆயக்குடி எனும் இடத்தில் மகளாகப் பிறந்தார் பொன்னுத்தாய். ஆனால் மதுரையே வாழ்க்கையாகிப் போனது. ஒன்பது வயதில், மதுரை நடேச பிள்ளையிடம் நாதஸ்வரம் கற்றுக்கொள்வதற்கு இவருடைய தந்தை ஏற்பாடு செய்தார். மகள் மீது எந்த*

அளவிற்கு பாசம் வைத்திருந்தாரோ அந்த அளவுக்கு அவரது திறமையின் மீது நம்பிக்கையும் வைத்திருந்தார். அந்த காலத்தில் இது மிகவும் அபூர்வமானது. பாராட்டுதலுக்குரிய மனிதர் அவர்.

பொன்னுத்தாய் அவர்களது குடும்பமே இசைக் குடும்பம். அம்மா வாய் பாட்டு மற்றும் ஹார்மோனியம் வாசிப்பதிலும் சிறந்தவர். நடசே பிள்ளை எனும் ஒரு மாமா புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி அவர்களிடம் மிருதங்கத்தை பயின்றவர். இன்னொரு மாமா வேலுச்சாமி புல்லாங்குழல் கலைஞர். அக்கா பரத நாட்டியம் பயின்றவர். பொன்னுத்தாயின் அப்பாவுக்கு மகளை நாதஸ்வர வித்துவான் ஆக்க வேண்டும் என்று ஆசை. அம்மாவோ, "அது சிரமமான இசைக்கருவி, அதனை ஒரு பெண்ணால் கையாள முடியாது, எனவே பாட்டோ, நாட்டியமோ கற்றுக்கொள்ளட்டும்" என்று சொல்லிப் பார்த்தார். பொன்னுத்தாயின் அப்பா விடவில்லை.

பெண்கள் நாதஸ்வரம் வாசிப்பதற்கு தஞ்சையில் மிகுந்த எதிர்ப்பும் இருந்தது. அதற்கும் கவலைப்படவில்லை. பொன்னுத்தாயை எப்படியாவது நாதஸ்வரநாயகியாக்கிவிட வேண்டும் என்று முடிவெடுத்து விட்டார். பொன்னுத்தாய்க்கு, குருவாக அமைந்த மதுரை நடேச பிள்ளை, நாதஸ்வரத்தை சாதாரணமாகக் கற்றுத்தரவில்லை, அசுர சாதகம் செய்ய வைத்தார். ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் இந்தக் குழந்தை தன் பிஞ்சுக் கைகளால் அந்த பிரும்மாண்டமான வாத்தியத்தைத் தாங்கி, தன் உயிர்மூச்சை உட்செலுத்தி, மங்கள இசையை உருவாக்குவதில் தன் முழு கவனத்தைச் செலுத்தியது, வெற்றிகளையும் கண்டது பொன்னுத்தாயின் முதல் இசை நிகழ்ச்சி, பதிமூன்று வயதில் அழகர்கோயில் ராமராயர் மண்டபத்தில் அரங்கேறியபோதே அவருடைய அபாரத் திறமையும் இசை ஞானமும் உலகிற்கு தெரியவந்தது. ஏதோ ஒரு சிறுமி நாதஸ்வரத்தைத் தூக்க முடியாமல் தூக்கி சப்தம் எழுப்புகிறாள் என்று அலட்சியமாக நினைத்தவர்கள், அவர் வாசிக்க, வாசிக்க, மகுடிக்கு மயங்கிய பாம்புகள் போல் ரசித்துக் கைதட்டி ஆரவாரம் செய்து உற்சாகப்படுத்தினார்கள் மக்கள்.

அதன் பிறகு அவருக்கு எங்கும் வரவேற்புதான். ஏறுமுகம்தான். பொன்னுத்தாயின் இசைத்திறனை கேள்விப்பட்டு, கேரளாவில், சபரிமலை ஐயப்பன் சன்னதியில் வாசிக்க முதல் பெண்மணியாக அழைக்கப்பட்டார். எதிர்ப்பு இல்லாமலா போகும்? ஆலயத்தின் பாரம்பர்ய வழக்கத்தின்படி பெண்களுக்கு அனுமதியில்லை என்றார்கள். ஆனால் தலைமை அர்ச்சகர் எப்படியோ சமாளித்து, இவரைப் போன்ற கலைஞர் இந்த சன்னதியில் தன் இசையை ஐயப்பசுவாமிக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி சம்மதிக்க வைத்தாராம்.

பொன்னுத்தாயின் மங்கள இசை செகந்திராபாத், மும்பை ஷண்முகானந்தா ஹால், இலங்கை, மலேஷியா என்று உயரம் தொட்டது. இவரது வெற்றி நிகழ்ச்சிகளை சொல்லிக்கொண்டே போகலாம். இவர் வாசிக்காத ஆலய திருவிழாக்களே இல்லை என்றும் சொல்லும் அளவிற்கு பொன்னுத்தாய் நாதஸ்வரம் எங்கும் ஒலித்தது. திருச்சி வானொலி நிலையத்திலும் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நாதஸ்வர இசைக் கலைஞராகப் பணியாற்றி இருக்கிறார். இவர், பிரபல நாதஸ்வர கலைஞர் திரு.ராஜரத்தினம் பிள்ளை அவர்களோடு இணைந்து வாசித்த நிகழ்ச்சிகளை தன் வாழ்நாள் பாக்கியமாகக் கருதினார். 1960-ம் ஆண்டு மதுரையில் காந்தி கண்காட்சியகத்தை திறந்து வைப்பதற்காக அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு வந்திருந்த போது பொன்னுத்தாய் அவர்களின் நாதஸ்வர இசையைக் கேட்டு மிகவும் சிலாகித்துப் பாராட்டியுள்ளார். பொன்னுத்தாயின் இசைப்பயணத்தில் பெரியதொரு இடர்வரத்தான் செய்தது.

பொன்னுத்தாயின் நாதஸ்வர இசை தொடரும்...

தொடரும்...

**வாசகர்கள் கவனத்திற்கு** : வேதபாரதி செய்திகள் படித்துவிட்டு நிறைய நண்பர்கள் தொலைபேசி மூலமாக கருத்துக்களை என்னிடம் தெரிவிக்கிறார்கள் தயவு செய்து வாட்ஸ்ஆப் மூலம் பதிவு செய்தால் மட்டுமே புத்தகத்தில் வாசகர் கடிதத்தில் பதிவு செய்ய முடியும். 9443495950

# பசு - சர்வரோக நிவாரணி

- ஆதிரையன்

## பண்பாடு

நாட்டுப் பசுக்களின் பொதுவான குணம்... இவற்றை தன்னிச்சையாக மேய்ச்சலில் விடும்போது நெற்பயிரை சுற்றியுள்ள புற்களை மட்டுமே உண்கின்றன. மாறாக மனிதனுக்கான, அதாவது மற்றவர்களுக்கான நெற்பயிரை உண்பதில்லை. அதுபோலவே, வயல் ஓரங்களிலுள்ள வரம்புகளின் (வரப்புகள்) புற்களை மட்டுமே உட்கொள்ளுகிறது.

இந்தப் பசுவினுடனே தனது வாழ்க்கையை நடத்தி அதன் பொருட்களை உணவாக உட்கொண்டு வாழ்பவனுக்கு பசுவின் குணமான "அடுத்தவரின் பொருட்களில் ஆசை வளர்வதில்லை" மாறாக தனக்கென்னத் தேவையோ அதை மட்டுமே அவன் நாடுகிறான்.

நாட்டுப் பசுக்கள் தன்னை வளர்ப்பவரை, தனது உயிராகவே கருதுகின்றன. தன்னைச் சார்ந்தவர்கள் தவிர, அதாவது அந்த குடும்பத்தைச் சார்ந்தவர் தவிர வேறு யாரும் அதனருகே செல்ல முடியாது. அப்படியாக அக்குடும்பத்தின் அங்கத்தினராக மாறிவிடுகின்றன.

இவற்றுடன் வாழும் மனிதனுக்கு தனது குடும்பத்தின் மீதான பிடிப்பு இறுகுகிறது. இதன் காரணமாக குடும்ப பாசமும், குடும்பத்தின் மீதான அக்கறையும் கூடுகிறது.

வடமொழியில் 'வத்ஸ'' என்றால் கன்று அதாவது குழந்தை. 'வாத்ஸல்ய'' என்றால் குழந்தைப் பாசம், அதாவது குழந்தை - தாய் பாசம் என்பது அளவிடமுடியாதது. இப்பாசம், 'கோமாதா - (வத்ஸ்) கன்று'' ஆகியவையிடமிருந்து கிடைத்தது.

'தாய்ப்பாசம்'' அதிகம் மற்றும் உயர்வானது பாரத தேசத்தில்தான். தாய் - குழந்தை பாசத்திற்கு பாரத தேசமே வழிகாட்டியாக மற்ற தேசத்தினருக்கு உள்ளது, காரணம், நமது தேசத்தின் பசுக்கள் (கோமாதாக்கள்) - (மீண்டும் நினைவு

*செய்கிறோம் 'பசு' என்றால் அவை பாரத தேசத்து பாரம்பரிய நாட்டுப் பசுக்களே!)*

ஆகவேதான், இந்த பசுக்கள் மத்தியில் வாழ்ந்தவர்களுக்கும், தற்போது வாழ்பவர்களுக்கும் பாசத்தின் உணர்வுகள் அதிகமாக காணப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் பாரத தேசம் முழுக்க இருந்தவை நாட்டுப் பசுக்களே! பாரத தேசத்தின் ஒட்டுமொத்த மக்கள் மத்தியிலும், வடகோடி முதல் தென்கோடி வரை ஒருவர் மீது ஒருவர் பாசத்தோடு அக்கறையும் சேர்ந்தே இருந்தனர்.

வெளியூர்காரர் ஒருவர் வருகிறார் என்றால், அவர் இந்த ஊருக்கு புதியவர் என்றால் அப்பகுதி மக்கள் அவருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அவர் எதற்காக வந்தாரோ அந்த வேலையையும் முடித்து அனுப்பி வைப்பார்கள்.

எங்கும் நீக்கமற நிறைந்திருந்த நாட்டுப் பசுக்கள் மத்தியில் மக்களும், மக்களுக்கு மத்தியில் பசுக்களும் நிறைந்து வாழ்ந்த இந்த பாரத தேசத்தில் செல்வம் மற்றுமல்ல மக்களின் மனங்களும் பண்பாட்டோடு செழிப்பாக இருந்தன.

சுய ஒழுக்கம் இல்லாமை, அடுத்தவரின் பொருளை அபகரிப்பதில் நாட்டம், தனது சொந்த குடும்பத்திலும், அதன் உறுப்பினர்களிடமும் பாசம் இல்லாமை, அதேபோலவே அடுத்தவர்களிடத்திலும் பாசம் இல்லாமை, குடும்பத்தின் மீது அக்கறை இல்லாமை, அடுத்தவர்களுக்கு உதவிட வேண்டும் என்ற உயர் குணம் இல்லாமை மாறாக முகம் அறியாதவர்களை ஏமாற்றும் குணமும் அதற்கான சிந்தனையும், இப்படி பாரத தேசத்தின் பண்பாடற்ற செயல்களுக்கு அடிப்படை காரணம், நாம் நாட்டுப் பசுக்களை இழந்ததே! அவற்றோடு வாழ்வதற்கான வாய்ப்புகளும், அவை தரும் சாத்வீக பொருட்களை உட்கொள்ளாததுமே காரணமாகும்.

இப்படி பாரத பண்பாடு சீரழிந்ததை நாட்டுப் பசுக்கள் கொண்டு மீண்டும் காப்போம்.

தொடரும்...

# குயிலும், கிளியும்

**(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.ஏட்., பரமக்குடி)**

*சீர்மை மிக்க சுடர்க்கொடி, பெருமாளுக்கு பூமாலை சூடிக் கொடுத்தவள்; நாம் உய்வு பெறபாமாலை பாடிக் கொடுத்தவள்! வேதம் அனைத்திற்கும் வித்தாகிய திருப்பாவை பாடியவள்! ஸ்ரீஆண்டாள்!.*

*இவள் பாடிய நாச்சியார் திருமொழி நெஞ்சம் நெக்குருகச் செய்வதாகும்.! அதி**லி**ருந்து ஒரு பாடலைப் பார்ப்போமா!*

**மென்னடையன்னம் பரந்து விளையாடும்**
**வில்லிபுத்தூர் உறைவான் தன்**
**பொன்னடி காண்பதோர் ஆசையினால்**
**என்பொருகயற் கண்ணினை துஞ்சா**
**இன்னடி சிவொடு பாலமுதூட்டி**
**எடுத்த என் கோலக்கிளியை**
**உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே**
**உலகளந்தான் வரக்கூவுவாய்!** *(நாச்சியார் திருமொழி 5-5)*

*ஸ்ரீஆண்டாள் தாம் வாழ்ந்த காலத்தில் ஸ்ரீவில்**லி**புத்தூர்ப் பெருமானை கண்குளிரக் காண இயலாது இரவும் பகலும் உறக்கமின்றித் தவித்தாள்!.*

*அப்போது ஒரு குயிலைப் பார்த்து அதனிடம் கூறும் செய்தியே இத்திருப்பாட்டு!*

*குயிலே மென்னடையன்னங்கள் விளையாடும் ஸ்ரீவில்**லி**ப்புத்தூரில் உள்ள வடபத்ரசாயிப் பெருமாளின் பொன்னடியைக் காண ஆசை கொண்டு, என் கண்கள் உறக்கத்தை மறந்து விட்டன! பாலும், சோறும் பரிந்து ஊட்டி வளர்க்கும் இக்கிளியை உனக்கு நட்புச் செய்து வைக்கிறேன்! நீங்கள் இருவரும் உலகளந்தவன் புகழ்பாடி என்னை மகிழ்விப்பீர்களாகுக! என வேண்டுகிறாள்!*

*இரு சிறகுகளின் உதவியால் அன்னம் வானத்தில் பறக்கிறது. ஞானம், அனுஷ்டானம் என்னும் இரண்டினால் ஆசார்யர்கள் வானுலகு அடைகின்றனர்!. நம்மையும் அடைவிக்கின்றனர்!*

*அன்னம் பாலையும், நீரையும் பிரித்துப் பாலை மட்டும் அருந்தும்! அதுபோல ஆசார்யர்கள் வேதங்களிலும், இதிகாசங்களிலும், சாத்திரங்களிலும் உள்ள அபொரங்களையும்,*

அல்பசாரங்களையும் நீக்கிச் சாரங்களை மட்டுமே சீடர்களுக்கு கற்பிப்பர்.!

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்யஹ்ருதயம் என்னும் நூலில், பற்றற்றபரமஹம்ஸ ராவுதலான நயாசலன், மெய்ந்நாவன் (பெரியாழ்வார்), நாதயாமுனர் போல்வாரை அன்னமென்னும்! என்று போற்றுகிறார்! ஆகவே வேதப்பயன் கொள்ளவல்ல, பெரியாழ்வாரையே நடையன்னம் என ஆண்டாள் சிறப்பிக்கிறாள்.

மென்னடையன்னம்:

ஆண்டாளிடம் அன்னங்களும் நடை கற்றுக் கொள்ளுமளவிற்கு மென்மையான நடையை உடைய அன்னமாகவே விளங்குபவள் ஸ்ரீஆண்டாள்!.

ஆக அன்னமாகிய ஸ்ரீவடபத்ர சயனருமை, நடையன்னமாகிய பெரியாழ்வாரும், மென்னடை அன்னமாகிய ஸ்ரீஆண்டாளும் ஆக மூவரும் கோயில் கொண்டமையால் ஸ்ரீவில்லிப்புத்தூர் முப்புரியூட்டிய திவ்ய தேசம் எனப் பெருமை பெற்றது.

இத்தகைய திவ்ய தேசத்தில் பெருமானைக் காண உறக்கமின்றித் தவித்த ஆண்டாள் தனக்கு உலகளந்த உத்தமன் புகழைப்பாடி மகிழ்விக்குமாறு ஸ்ரீ ஆண்டாள் அவதரித்த பின்பு ஆண்டாளிடம் நடை பயில்வதற்காக அன்னங்கள் கூட்டம், கூட்டமாக ஸ்ரீவில்லிப்புத்தூரில் முகாமிட்டதால் "மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிப்புத்தூர்!" என்று கூறினாள்.

இங்கே ஆண்டாள் குறிப்பிடுவது நாட்டில் நாம் காணும் சாதாரணமான அன்னங்கள் அல்ல மூவகை அன்னங்களாம் 1.அன்னம் 2. நடையன்னம் 3.மென்னடையன்னம் ஆகியவை அவை ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு, "முப்புரியூட்டிய திவ்யதேசம்!" என்பது ஒரு சிறப்புப் பெயர் அதற்கேற்றவண்ணம் இங்கு அன்னம் என்பது இங்குக் கோயில் கொண்டுள்ள வடபத்ரசாயிப் பெருமாளைக் குறிக்கும்.

அன்னம்:

ஒருசமயம் பிரம்மா வேதங்களை மறந்து போனார்! அதனால் படைக்கும் திறன் இன்றித்தடுமாறினார். அது சமயம் திருமால், "ஹம்பொவதாரம்" எடுத்துப் பிரம்மனுக்கு அனைத்து

*வேதங்களையும் உபதேசித்தார்!.*
*இதனை ஆழ்வார்கள்*
*"அன்னமாய் அங்கு அருமறைபயந்தான்!" என்றும்*
*"அன்னமாய் முனிவரோடு அமரர் ஏத்த*
*அருமறையை வெளிப்படுத்த அம்மான்!" என்றும்*
*புகழ்ந்து பேசுகின்றனர்!. எனவே அன்னம் என்பது இங்குள்ள வடபத்ர சயனரையே குறிக்கும்!*

*நடையன்னம்:*

*நடையன்னம் என்பது பெரியாழ்வாரைக் குறிக்கும்! அன்னத்திற்கும் ஆசார்யார்களுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.!*

*கிளியையும், குயிலையும் வேண்டுகிறான்.!*

*யாவர் அந்தக் குயிலும், கிளியும்? இராமனது புகழைச் சரிதமாகப் பாடிய ஸ்ரீவால்மீகி முனிவரே அக்குயில்!*

**கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம்**
**ஆருஹ்ய கவிதாசாகாம் வந்தே வால்மீகி கோகிலம்**

*இதன் மூலம் குயில் என்பது வால்மீகி முனிவர் என்பதை அறியலாம்.*

*கண்ணன் சரிதமாகிய ஸ்ரீமத் பாகவதத்தை கூறிய ஸ்ரீசுகப்பிரம்ம முனிவரே கிளியாவார்!. உறக்கமின்றி இருக்கும் வேளையில் இராமகாதையையும், கண்ணன் கதையமுதத்தையும் ஒரு சேர அனுபவிக்க விரும்பியவள் ஸ்ரீஆண்டாள். இதற்குத் திருப்பாவையில், "புள்ளின் வாய் கீண்டானை பொல்லா, அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை!" என இருஅவதாரங்களையும் இணைத்து ஆண்டாள் பாடியுள்ளதே சான்றாகும்!. மேலும் நாச்சியார் திருமொழியில் (9-9)*

*"பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொ**லி**யம்*
*சார்ங்கவில் நாணொ**லி**யும் தலைப்பெய்வது எஞ்ஞான்று?"*

*என்று கூறுவதன் மூலம் இரு இதிகாசங்களையும் ஒருசேர அனுபவிப்பவள் என்பது புலனாகிறது.*

*எனவே மனக்கவலை போக வேண்டுமாயின் இராமசரிதையையும், கிருஷ்ணகதையமுதையும் கேட்க வேண்டும் என்பதைக் குயில், கிளி என்பதன் மூலம் ஆண்டாள் அறிவுறுத்துகிறாள்!. நாமும் அவ்வாறேமுயல்வோமாக!!*

*ஸ்ரீஆண்டாள் திருவடிகளே சரணம்!*

# புரோஹிதர்
# “சமாதான மன்றம்”

கடந்த சில மாதங்களாக புரோகிதர்கள் செயல்படும் விதம், அவர்கள் பராமரித்து வரும் ஆவணங்கள் அவற்றின் சாட்சிபூர்வ பயன்பாடுகள் போன்றவற்றை பார்த்தோம்.

புரோஹிதர்கள், அவர்களின் சேவையில் உள்ள கிராமங்கள் மற்றும் அவர்கள் வசிக்கும் கிராமங்கள் ஆகியவற்றில் பல நேரங்களில், பல நிகழ்ச்சி சார்ந்த மக்களின் கருத்து வேறுபாடுகளில் ‘சமாதான மன்றமாக’’ செயல்பட்டு அந்த மக்களிடையே ஏற்படுகின்ற பந்தங்களை அவ்வப்போது தணிப்பதற்கும், மக்களின் ஒற்றுமை குலையாமல் இருப்பதற்கும் காரணமாக உள்ளனர்.

ஒரு கிராமத்தில், அந்த கிராம தேவதை திருக்கோவிலின் உற்சவம் நடைபெறுகின்றன. அக்கோவில் உற்சவத்திற்கான நாள் குறிக்கும் போது கிராம மக்களிடைய இருவேறு அல்லது பல்வேறு கருத்து வேறுபாடுகள் ஏற்படுகிறது. சில குழுக்களாக மக்களிடையே பிரிவுகள் ஏற்பட்டு அவரவர்கள் வசதிக்கேற்ப நாள் குறித்துக் கொண்டு அந்த நாளில் திருவிழா (உற்சவம்) நடத்த வேண்டும் என்றும் மாறுபட்ட எண்ணம் உருவாகிறது. இதற்கு தீர்வுகாண பல நாட்கள் பல மட்டங்களில் கிட்டத்தட்ட வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் வரைக்கூட பஞ்சாயத்துகள் நடைபெற்று தீர்வு காண முடிவதில்லை.

இந்த சூழ்நிலையில் புரோகிதர் குறுக்கிட்டு தனது தரப்பு கருத்துகளை எடுத்து வைக்கிறார். இதற்கு காலம் காலமாக, அந்த கிராமங்களில் கடைப்பிடித்து வரும் சம்பிரதாயங்கள் மீறப்பட்டதால், மாற்றப்பட்டதால் அந்த கிராமம் சந்தித்த இடர்பாடுகளையும் எடுத்துச் சொல்லி அனைவரின் கவனத்தையும் தனது பக்கம் கொண்டு வந்து அக்கோவிலின் உற்சவம் எப்போது, எப்படி நடத்த வேண்டும் என்பதையும் தெளிவாக மக்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் எடுத்துச் சொல்கிறார்.

கிராம மக்களின் நலனை தனது நலனாகக்கொண்டு வாழும் புரோகிதரின் வாழ்வியல் முறை, கிராம மக்கள் எவரிடத்திலும் பகைமை இல்லாமை, அக்கறையோடு தனது தரப்பின் கருத்துகளை எடுத்து மன்றத்தில் வைத்தல், கிராம

*மக்கள் பலருக்கு கடந்தகால நிகழ்வுகள் தெரிந்திருந்தாலும், அதை பக்குவமுடன் சபையினர் முன்னே தனது கருத்தாக வைக்கும் பாங்கு இவற்றை கண்டதும் ஒட்டுமொத்த கிராமத்தினரும் புரோகிதரை ஆமோதித்து அவரது கருத்தை அப்படியே அவர்கள் ஏற்றுக் கொள்ளுதல்... போன்றவற்றை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் போன்ற உயர் அதிகாரிகள் கண்டு பிரம்மித்துள்ளனர்.*

*பல நாட்களாக பலர் முன்னிலையில் பஞ்சாயத்து நடைபெற்றும் ஒரு முடிவிற்கு வராத பொதுப் பிரச்சனை புரோகிதர் ஒருவர் மூலம் ஒருசில நிமிடங்களில் தீர்வு எட்டப்பட்டு மொத்த கிராமமே அமைதியை நோக்கி இறை வழிபாட்டோடு நகர்கின்றது.*

*இந்த திருவிழா பிரச்சனை போன்றே, மழைத் துவங்கியதும் கிராமப் பொதுவில் 'பொன் ஏர்'' கட்டித் துவங்கும் உழவுத் தொழில், மழையை வரவேற்கும் 'இந்த பூஜை', அந்தந்த தமிழ் வருடத்தில் எத் தான்யம் அதிக உற்பத்தியாகும் என்ற ஆலோசனை, கிராம காவல் தெய்வங்கள் வழிபாடு செய்வதற்கான நாட்கள், வழிபாடு செய்வதற்கான முறை, ஊர் பொதுமக்களில் வயது சார்ந்து, குடும்ப பாரம்பரியம் சார்ந்து, அவர்களது அந்தஸ்து சார்ந்து எந்த இடத்தில் யாருக்கு முதல் மரியாதை, தெருக்கூத்து நாடகம் போன்றவற்றில் கூட எந்த ஊரைச் சார்ந்த எந்த குழுவினரை எந்த தெய்வத்தின் திருவிழாவிற்கு அழைக்க வேண்டும் என்ற கிராமத்தின் ஒவ்வொரு பொது நிகழ்ச்சிகளிலும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் எழும்போது அங்கே புரோகிதர் ஒருவரால் மட்டுமே உடனடியாகவும், அமைதியாகவும், அனைவராலும் ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளும் வகையிலும் தீர்வு காண்கின்றனர் கிராமத்தினர். அங்கே புரோகிதர் 'சமாதான மன்றமாக'' செயலாற்றுகிறார்.*

*இதற்கு அடிப்படை காரணம், ஒவ்வொருவரும் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் அக்கறையோடு அந்த வீட்டின் அங்கத்தினர் ஒருவராக அந்தந்த வீட்டின் அவ்வப்போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வளிப்பவராக புரோகிதர் இருந்தார் என்பதே! அவற்றை பின்வரும் நாட்களில் காண்போம்.*

**- ஆதிரையன்**

## வாசகர் கடிதம்

# கற்கண்டு நிறைந்த கிண்ணம்

டி.சூரியநாராயணன் அவர்களின் ‘ஒரு நிமிடம் உங்களோடு’ பகுதி பல நிமிடங்கள் சிந்திக்க வைக்கிறது. மேலும் இவரது ஒவ்வொரு இதழின் ‘‘அட்டைப்பட விளக்கம்’’ அற்புதம், ஆழமானவை.

தமிழை, தமிழ் வாழ்வினை நினைவு கூறும் பரிதியின் தொகுப்பு அருமை.

சின்னஞ்சிறு மூளையில் அறிவியலை எப்படி செலுத்துவது என்ற சிவசங்கரி அவர்களின் கற்பனையும் அருமை.

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி அவர்களின் பெற்றோர்க்கான அறிவுரை இன்றைய காலத்தின் கட்டாயம், அனைவரும் உணரவேண்டியது.

இருக்குமிடத்தில் இருந்து யாத்திரை செல்வோருக்கு சரியாக வழிகாட்டுகிறார் திருச்சி.கணேசன் அவர்கள்

தாய்மையின் பூமி, பெண்ணினத்தின் பூமி, சக்திகளின் சக்தி நிறைந்த பூமி பாரதம் என்பதை கண்ணாடியாய் காட்டுகிறார், சர்வதேச பேராசை பிசாசுகளின் சதி அதற்கு துணைபோகும் பாரத சுயநலவாதிகள் இவர்களால் சீரழியும் பாரத பண்பாடு ஆகியவற்றை கண்முன்னே நிறுத்துகிறார் டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்.

பரமக்குடி சீனிவாசன் அவர்களின் இரு இதிகாசங்கள் ஒப்பீடு, மஹா பெரியவாளின் விளக்கங்கள், ஸ்வாமிகளின் தர்மத்தின் குரல், பாகவதம், பகவத்கீதை ஆகியவையும் சிறப்பு.

மொத்தத்தில் மார்ச்’21 மாத “வேதபாரதி செய்திகள்” கற்கண்டு நிறைந்த கைக் கிண்ணமாய்...

**சுசீலா நடராஜன், புதுச்சேரி.**

---

மார்ச் மாத இதழில் இடம்பெற்ற“இராமாயணம் – மகாபாரதம்’’ ஒப்பிட்டு எழுதியிருந்த விதம் அருமை. பாராட்டுக்கள்.

**சாந்தி ரமேஷ், மும்பை.**

உ
ஸ்ரீ குருவே சரணம் சரணம்

வேதபாரதி துவங்கிய நாள் முதலாய் உறுதுணையாய் நின்று வழிகாட்டி வரும் **RVBS மணியன் ஜி** அவர்களை வணங்கி மகிழ்கிறது "வேதபாரதி அமைப்பு". அழைத்த போது உடன் வந்து வழிகாட்டி எந்த பிரதி பலனும் பாராமல், எளிமையாக தான் எடுத்துக் கொண்ட கொள்கையில் சிறிதும் மனம் தளராமல், செயலாற்றி வரும் நம் மதிப்பிற்குரிய **RVBS மணியன் ஜி** அவர்கள் பல தர்ம நூல்களை எழுதி உள்ளார்கள். புத்தகங்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்-பட்டுள்ளன. வாங்கி படித்து பயன் அடைய அன்புடன் வேண்டுகிறோம்.
ஆசிரியர்.

| | | |
|---|---|---|
| 1. | பாரதத்தில் ராஜதர்மம் அன்றும் இன்றும் | 250.00 |
| 2. | பாரத நாடு பாருக்கெல்லாம் திலகம் | 140.00 |
| 3. | விவேகானந்தர் காட்டிய வழி... | 120.00 |
| 4. | கர்ணா! நீ மஹத்தானவன் | 80.00 |
| 5. | அர்த்தமுள்ள ஹிந்து தர்மம் | 80.00 |
| 6. | ஹிந்து விழாக்களும விரதங்களும் | 100.00 |
| 7. | இந்து தர்மம் - சந்தேகம் தெளிவோம் | 50.00 |
| 8. | ஹிந்து வாழ்வியல் சடங்குகள் | 120.00 |
| 9. | திருக்கோயில் திருவிழாக்கள் | 70.00 |
| 10. | ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரர் | 100.00 |
| 11. | ஹிந்துக்களே நாம் எங்கே போகிறோம்? | 120.00 |
| 12. | குரு பக்தி | 40.00 |
| 13. | Value Education - Vol. 1 | 100.00 |
| 14. | Value Education - Vol.2 | 100.00 |
| 15. | என்று மாறும் ஹிந்துக்களின் இந்த மனோபாவம்? | 20.00 |
| 16. | ஆன்மீகத்தில் சில... ஏன்? எதற்காக? | 50.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வுதான் என்ன? | 60.00 |
| 18. | கலியுகத்தில் கைகொடுக்கும் கடவுள் திருநாமம் | 50.00 |
| 19. | நெருப்பில் பூத்த நெருஞ்சி மலர் (திரௌபதி) | 60.00 |
| 20. | திருக்கோயில் அமைப்பும் ஆலய வழிபாட்டு முறைகளும் | 100.00 |
| 21. | வந்தே மாதரம் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம் | 120.00 |
| 22. | யார் அர்ச்சகர் ஆகலாம்? | 40.00 |
| 23. | ஹிந்து சமயக் களஞ்சியம் | 150.00 |
| 24. | அன்றாட வாழ்வில் ஆன்மிகம் | 50.00 |
| 25. | விடுதலைப் போர் - தெரிந்த பெயர்கள் தெரியாத தகவல்கள் | 120.00 |
| 26. | ஹிந்து தர்மம் (ஸ்லோகங்கள், ஸுபாஷிதங்கள் மற்றும் அமுதமொழிகள்) | 50.00 |
| 27. | இஸ்லாமிய இருளில் தெய்வத் தமிழகம் | 50.00 |

தொடர்புக்கு : 99406 82929

# குரு அருள் திருவருளோடு கடந்த மாதங்களில் வேதபாரதி அமைப்பு வாயிலாக நடந்த நிகழ்வுகள்

**வேத வகுப்புகள் :**

*ஸ்ரீமான் கைலாஸ கனபாடிகள் குழுவினர் மூலம் கடந்த 10 மாதங்களாக ஆன்லைன் மூலம் ஸந்த்யா வந்தன வகுப்புகள் வேதபாராயண வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 400க்கும் மேற்பட்ட அந்தண சிறுவர்கள் பெரியவர்கள் பயில்கிறார்கள்.*

**ஸ்லோக வகுப்புகள் :**

*மதுரை ஸ்ரீமதி நீலா முரளிதரன், ஸ்ரீ முரளிதரன் மூலமாக, 1000-க்கும் மேற்பட்ட சிறியவர்கள், பெரியவர்களுக்கு ஸ்லோக வகுப்புகள் நடந்து வருகிறது.*

*ஸ்ரீ கணேஸ பஞ்சரத்னம், அனுமன் சாலிஸா, ஸ்ரீ வைத்யநாத அஷ்டகம், மார்க்கபந்து ஸ்லோகம், ஸ்ரீ குரு பாதுகா ஸ்லோகம், ஸ்ரீ கார்த்திகேயன் ஸ்தோத்திரம், பெரியவர்களுக்கு சுப்ரமண்ய புஜங்கம், ஸ்ரீ மீனாட்சி ஸ்தோத்ரம், ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்ரம், அன்னபூர்ணா ஸ்தோத்திரம், ஸ்ரீ சந்த்ரசேகர அஷ்டகம், யோக மீனாட்சி ஸ்தோத்ரம் நடந்து வருகிறது. சம்ஸ்க்கிருத வகுப்புகள் நடந்து வருகிறது.*

*வசதி இல்லாத அந்தண சிறுவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கிவருகிறோம். திருமணம் ஆகாத, வசதி இல்லாத அந்தண பெண் குழந்தைகளுக்கு திருமண உதவித் தொகை வழங்கி வருகிறோம்.*

**ஆத்தி சூடி கொன்றைவேந்தன் :**

*60க்கும் மேற்பட்ட பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, விநாயகர் அகவல், திருப்பாவை, திருவெம்பாவை கற்றுக் கொடுத்து போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கி வருகிறோம்.*

**பெண் குழந்தைகளுக்கு - விழிப்புணர்வு :**

*பெண்மையை போற்றுவோம் - நிகழ்ச்சி 10 மாதங்களாக தொடர்ந்து நடந்து வருகிறது. 1000 க்கும் மேற்பட்ட பெண்குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.*

*ஆசிரியர்*

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்த்தான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

RNI No. : TNTAM/2016/73726    REGD No. : TN/CC(S)DN/571/21-23
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Published 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To                                                        Printed Matter

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.